KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ௵ அக்டோபர் ௴ 18௳ [No. 41

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 641
2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன்தூதுப் படலம். 643
3. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 645
4. மூடர்களின் மூலை.
R. G. நாராயணமூர்த்தி. B. A. L., T. 648
5. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 10-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 651
6. தற்காலக் கொள்கைகளுந் தமிழும்.
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 653
7. வர்த்தமானம் 656

கலாநிலயம்

எத்தைக் கண்டு இச்சை கொள்வோம் 9.

மதவுணர்வினால் மாண்புற்ற மகாத்மா காந்தியின் வாசகத்தைக் கேட்டோம். கடவுள்சித்தத்தில் ஆர்வமுடையபக்தர் அவர்அவ்வண்ணம் இயம்புவாராயினார். அப் பக்தருக்குப் பக்தராய் நின்று அவரை அமெரிக்கா தேயத்திற்கு அறிமுகம் செய்துவைத்த ஜான் ஹேய்ன்ஸ் ஹோம்ஸ் (John Haynes Holmes) என்பவரும் வில் ரோன்டின் கடிதத்திற்கு ஒரு விடை தந்துளாராதலின், அதனையும் இதன் அயலில் இனிது காணலாம்—

அன்புடைய மிஸ்டர் ரோன்ட்,

என்னை இவ்வாழ்க்கையில் அமர்த்தி நடத்திவைப்பது எது, என்று கேட்கின்றீர்—கூறுகின்றேன். பொய்யும் வஞ்சனையும் அநீதியும் தீச்செயல்களும் நிகழ நான் காணுந்தோறும் என்னுள்ளே நின்று தின்று தீர்க்கின்றவொரு தீயைப்போல் எரிகின்ற யாதோ வொன்று; இவ்வுலகம் எப்படி இருத்தல் வேண்டுமென்கின்றவொருகாட்சி தென்படுந்தோறும், போதிய அளவு நாம் வருந்திமுயன்றால் அப்படியே ஆகுமாறு அதனை நாம் அமைத்துவிடலாம் என்ற எண்ணம் உதிக்குந்தோறும், அன்பின் ஆகர்ஷணத்தைப் போல், புறத்தே யிருந்து என்னைப்பற்றி இழுக்கின்ற யாதோ வொன்று; இவை என்னை இவ்வாழ்க்கையில் அமர்த்திச் செலுத்துகின்றன.

என் உயிர் நீங்குமுன் சில செய்துவைக்கவேண்டுமென நான் ஒரு காலத்தில் எதிர்பார்த்ததுண்டு. நான் எடுத்துச் சொல்கின்றவைகளாலும் முயன்று செய்கின்றவைகளாலுமிவ்வுலகம்ஓரளவுஎன்ஆசையின்படியே மாறக்காணலாம் என்றுஎண்ணியிருந்தேன். இப்பொழுதோ, இன்னும்சில இலக்ஷஇலக்ஷ வருடங்களுக்கு அப்பால் இவ்வுலகம்நிலைத்திருக்கும்என்னும் நம்பிக்கை எத்துணை ஆதாரமற்றதோ அத்துணைஆதாரமற்றதாகவே என்னுடைய ஆசையுந் தீர்ந்துவிட்டது. வேறென். நான்முதல்முதல் என்கண்களைத் திறந்தபோதிருந்த அப்படியேஇவ்வுலகத்தைவிட்டுவிட்டு நான் ஒருநாள் என் கண்களைமூடிக்கொண்டு போவேனாவேன் - அவ்வாறேகாலவளவில் இவ்வுலகமுங்கூடத்தான் துவக்கியதுபோன்றே முடிந்தும்விடும். ஆயினும், இதற்கு இடையில், பிரபஞ்சசிருஷ்டியின் ஜீவனானது, அறியப்பெறாததும் கனவிலுங் கண்டிராததும் ஆகிய வோர்முடிவை நோக்கி யோர் நதியெனச் சென்றுகொண்டிருக்கின்றது; என்னுடையஉயிர் அந்நதியின்மேல்மிதக்கும் ஓர் செத்தையைப்போ லல்லாமல், வெள்ளத்தின் ஒரு துளியைப்போலக் கலந்து, மகத்தானவொரு கதியை எய்துமப் பாய்ச்சலோடு தன் சக்தியை மேல்செலுத்திச் செல்கின்றது.

எனக்குஇருக்கும் இந்தச் சிருஷ்டிசக்தியின் உணர்ச்சியே, (இது, பிரபஞ்சத்தின் இதயத்தின் மத்தியில் இருக்கின்ற சிருஷ்டிசக்திக்கு எத்துணைதான் எள்ளத்தனையே இணையாகுமாயினும்) என்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய வலிமையைத் தருகின்றது—இவ்வாழ்க்கையில் மிகப்பெரிய நல்ல ஒரு உற்சாகமுங் கொள்கின்றேன். நான் வாழ்கின்றேன் என்னும் உணர்ச்சி எப்பொழுது எப்பொழுது எத்துணை எத்துணை தலைநிமிர்ந்து எழுகின்றதோ அப்பொழுதெல்லாம் அத்துணையத்துணை இன்பமயமான நினைவில் ஆழ்ந்தவனாகின்றேன், நிச்சயம். அன்பின் அனுபவம் வாய்க்குங்கால் வாழ்வின் உணர்வு தலைநிமிர்ந் தெழுகின்றது; பெரியோர் முயற்சியின் முடிவை

எதிர்பார்த்து என்னுடையவைகளையெல்லாம் எடுத்தெறியும்போது அன்னதே நேர்கின்றது நிச்சயம்; இன்னிசைக் கீதங்கள் என் செவியை எட்ட அதனைப்பாடியோன் உள்ளத்தின் உவகையை யான் உணர்கின்ற அவ்வொரு நொடியில் யான் வாழ்கின்றேன் என்னும் வாய்மை தலைநிமிர்ந்தெழுகின்றது; மீண்டும், திடீரென்று ஒவ்வொரு வேளையில் ஆன்மதத்துவத்தின் அரியதோர் காட்சியை ஒருசிறிது யான் காண, வியந்து துடிக்கும் என் உதடுகளின் வார்த்தைகளா லதுவிளம்பப்பெறுங்கால், "வாழ்க்கையின்வாய்மை பொதிந்ததோர் வேளை அன்றோ இது" என்ன எனது உள்ளம் பூரித்து எழுகின்றது, நிச்சயம்; இன்னும், நீதியின் சார்பிலும் தருமத்தின் சார்பிலும் நின்று, வெற்றியோ தோல்வியோ எய்தும்வரையிற் போராடற்குப் புகுங்கால் பிறக்கின்ற உணர்வும் அன்னதே; மற்றெல்லாவற்றிலும், நான் பிரார்த்தனை செய்யும்போது, அல்லது பிரார்த்தனை செய்ய முயலும்போது, மெல்லியகுரலில் என்னுள்ளத்தே ஓர் விடை கேட்குங்கால் என் வாழ்க்கையானது முழுமையுற்றுத் தலைநிமிர்ந்தெழுகின்றது, நிச்சயம். இவைகளெல்லாம் சிருஷ்டி அனுபவங்களே; இவைகளெல்லாம், பாழ்பட்ட குழப்பத்திடையிலிருந்து ஒரு ஒழுங்கையும், ஒழுங்கின் இடையிலிருந்து ஓர் அழகையும் உண்டாக்குகின்ற செய்கையின் அனுபவங்கள்; இவைகளெல்லாம் இவ்வகையில், தத்தம் எல்லைகளுக்குள், எல்லாப் பொருள்களையும் புதுமையாக்கிவிடுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் தான் நான் உயிர்வாழ்க்கையைக் கலப்பற்ற தத்துவத்தில் உணர்ந்துளேன்; உணர்ந்து அவைகளின் மூலமாய்க் கடவுளைக் கண்டுளேன் என நம்புகின்றேன்.

இதுதான்என்னை இவ்வுயிர்வாழ்க்கையில்நடத்திவைக்கின்றது. நம்மைக் கடந்து நம்மிலும் மேலாக உயர்கின்ற அவ்வேளைகளில்தோன்றிமறைகின்ற அவ்வறிவைவிட நம்முடைய வாழ்க்கையைத் தாங்கவல்லது வேறொன்றுமில்லை. இச்சிருஷ்டிசக்தியின் ஒரு முக்கியமானபாகமே நாம் என்பதையும், ஆகையால் நாமுமேகடவுளோடு சிருஷ்டிகர்த்தர்களாயிருக்கின்றோமென்பதையும், அவ்வாறாதலின், இப்பிரபஞ்சத்திற்கு ஒருமகத்தான எதிர்காலத்தை நாம் ஏற்படுத்துகின்றவர்க ளாகின்றோம் என்பதையும், அவ்வரிய சிலவேளைகளில் நாம் அறிந்துகொள்கின்றோம். அந்த எதிர்காலம் எவ்வாறிருக்கும் என்பதை நான் காணமாட்டாதவனாயினால் என்! சிந்திக்கவும் மாட்டாதவனாயினாற்றான் என்! இவ்வறியாமையை நாம் யாதும் ஒளிக்காமல் ஒத்துக்கொள்ளுவோமாயின், பிறகு அதுதான், நம்மினும்பெரிய கருமங்களின்பொருட்டு வாழ்கின்றவொரு உணர்ச்சியனுபவத்தின் முன், விளக்கின்முன் இருளென, நீங்கிவிடுமென்பது நிச்சயம்.

இப்படிக்கு
ஜான் ஹேய்ன்ஸ் ஹோம்ஸ்.

மேன்மை தங்கிய வாசகங்கள் இவை. மகாத்மா காந்தியின் வாழ்க்கைத்தத்துவமும் இன்னதேயாக இருக்க இவர் காண்பதனால், இவர் அவரை அத்துணைப் பாராட்டுகின்றார். மகாத்மா காந்திக்கு ஜான் ஹேய்ன்ஸ் ஹோம்ஸ் ஈடாக இருக்கத் தகும்.

இனி, வில் ரோன்ட் தாம்கேட்ட கேள்விகளுக்கு, தாமே விடைகூறக் கடமைப்பட்டிருப்பதைஅறிந்து, இவ்விடயங்களைப்பற்றித் தாம் கொண்டுள கருத்துக்களைப் பின்வரும் வாக்கியங்களில்தெரிவித்திருக்கின்றார்:—

"இதோ ஒருமாது முகமெலாம் மலர்ந்த நகையளாய்த் தன் மகவினோடு விளையாடிக்கொண்டிருக்கின்றாள். கண்கொண்டு இவ்வைபவத்தைக் காண்மின். ஏ, அவலமாய்ப்போன அறிவாளிகளே, இவளைவிட நீங்கள் மேதாவிகள் என்று எண்ணுகின்றீர்களோ? ஏ ஏ, குதர்க்க சாஸ்த்திர நிபுணர்காள்! ஒருபாகத்தை அப்பாகத்தினளவே ஆராய்வதால் அதனை அறிந்துகொள்ளலாம் என்று வீணே எண்ணி அலைகின்றீர்களே! தான் ஒரு பாகமாகுந் தன்மையை மறந்து முழுமையின்அகத்தே தனக்கோர் இடந் தேடிக்கொண்ட இம்மங்கை நம்மிலும் அதிகம் தத்துவம்மிகுந்தவளென்பதைக் கண்டறிந்து கொள்ளீரோ?

வாழ்க்கையின் பொருளையும் பயனின் அமைதியையும் அடைவதற்குரிய நெறி, மற்று, இதுதான். ஒரு முழுமையோடு கலந்துகொண்டு உனது உடல்அத்தனையும் உனது மனமத்தனையும் செலுத்தி உழைக்கக்கடவாய். நம்மினும் பெரியவொன்றைச் செய்யவோ, செய்வோருக்கு உதவவோ, நமக்குச் செவ்வி யளிக்கவல்லதா யிருத்தலாற்றான் இவ்வாழ்க்கை பொருளுடையதுஆகின்றது. அச்செய்கைகளுக்கு அவரவர்களுடைய மனைவிமக்களால் அமைந்த குடும்பங்களே களனாய் நிற்றல்வேண்டுமென்னும் அவசியமில்லை. இயற்கையானது தன்னுடைய குருட்டு அறிவினால், மிகமிகப் பேதையரும் தொடரக்கூடியபடி நேராய் அமைத்த அகன்றதோர் நெறியாம் இக்குடும்பம் என்னும் கூட்டுறவு. இக்குடும்பம் அன்றி, ஒருவனது அந்தரங்கத்தில் மறைந்து இருக்கின்ற பெருந்தன்மையெல்லாம் வெளிக்கொணர்ந்து, அவன் இறந்த பின்னும் சிதைவதில்லா ஒருகாரியத்தை மேற்கொள்ளும்படி தூண்டவல்லவொரு நோக்கமுடைய எந்தச் சங்கமாயிருப்பினும் இருக்கலாம். வாழ்க்கைக்கொரு பொருள்கொடுத்து அவனை அவனையேவிட உயர்த்தி, பெரியதோர் காரியத்தி லொத்துழைக்கும்படி அச்சங்கம் செய்யுமாயின் அது போதும்.

மற்றவர்களைக்கேட்டிருக்கின்ற கேள்விகளுக்குநானும் என் விடையை நேர்முகமாகச் சொல்வது கடமை. என்வரையிலோ, எனதுகுடும்பத்திலும் நான்செய்துவருகின்ற வேலைகளிலும், என் வாழ்க்கையின் பொருள் அடங்கிவிட்டது. ஆயினும், இதனினும் பெரியதோர்காரிய முயற்சிக்கு என்னை முறைசெய்துகொண்டுளேன் என்றுநான் சொல்ல இடமிருத்தலாகாதா என ஆசைப்படுகின்றேன். சுயநினைவும் ஒருவகைச் சுயநயப்பரோபகாரமும் எனக்கு ஊக்கம் அளிக்கின்றன. இவைகளால் நான், எல்லாரும் என்னைப் புகழ்ந்து பாராட்டவேண்டும் என்று பேராசைப்படுகின்றேன்; என்னை அண்டியிருக்கின்றவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்னும் வெறி கொண்டுளேன். என்னைச்சுற்றி எங்கும் இன்பமே தழைத்துப்பெருகவேண்டுமென்பதும், என்னினும் மேலோரால் நான் பாராட்டப்பெறவேண்டுமென்பதும், என்வாழ்க்கையின் முடிவான நோக்கங்களாயமைந்து இருக்கின்றன. இன்பம் பெறுவதன்பொருட்டு நான், என் வீட்டினுள்ளும் என் புத்தகங்களுக்கிடையேயும், என் இங்கிபுட்டிக்குள்ளும், பேனாவைச் சுழற்றியும் வட்டமிடுபவனா யிருக்கின்றேன். இருப்பினும், இன்பம் உடையவன் நான் என்று என்னைச் சொல்லிக்கொள்வதற்கில்லை. நம்மைச் சூழ்ந்து காணப்படும் இவ்வறுமைக்கும் துன்பத்திற்கும் இடையே எந்த மனிதன்தான் முற்றிலும் இன்பமுடையவனா யிருத்தல்கூடும்? ஆயினும், நான் திருப்தியும் அமைதியும் வாய்த்தவரையில் நன்றியும் உடையவனாக இருந்துவருகின்றேன். இறுதியாக என்னுடைய

பொக்கிஷமாக அமைவது எது என்றுகேட்டால், எல்லாம் என் பொக்கிஷந்தான் என்று எதிர் விளம்புவேன். மனிதனாவான் ஒவ்வொருவனும் அனேக காரியங்களைக் கையிற் கொண்டு அனேகவிஷயங்களில் தன்னுடையகவனத்தைச் செலுத்தி யிருக்கவேண்டும். ஒருவன் தனது இன்பத்தை, தன் மக்கள் அல்லது புகழ் அல்லது செல்வம் அல்லது உடல்நலம் என்னும் இவைகளில் ஒவ்வொன்றிலேயே வைத்திருத்தலாகாது. மற்றவைதாம் தவறினாலும் அவைகளின் ஒன்றிலிருந்து தனக்கு உரிய திருப்தியை அடையக்கூடியவனாக இருத்தல்வேண்டும். இத்தனையும் இழந்தாலும் இறுதியில் இயற்கையே எனக்கு ஆதாரமாகக்கூடும். எல்லாச் செல்வங்களும் எல்லா நலன்களும் என்னைவிட்டுப் போய்விட்டாலும், வளப்பமுடைய வயலின் வறண்ட தரையின், விரிந்த விசும்பின், தோற்றத்தைக்கண்டுகெண்டு என் வாழ்க்கையைத் தாங்கக்கூடியவனாகவே இருப்பேன். கண்ணையும் இழந்துவிட்டாலும், பண்ணமைந்த பாடல்கள் என்வாழ்விற்கு ஆதாரமாய் அமையும். காதும் செவிடானால், புலமைசான்ற பாசுரங்களின் நினைவே எனக்குப் போதும். எல்லாம் கிடக்க, வாழ்க்கைக்குவேண்டிய ஆதாரத்தை அவரவர் தத்தம் அனுபவம் என்னும் களஞ்சியத்தினின்று எத்தகையினோரும் பெற்றுக்கொள்ளலாமே.”

இன்னும் எழுதுகின்றார் வில் ரோன்ட். அவைகளைக் கருதுவதன்முன் இதுகாறும் இவர் வழங்கிய உயரிய மொழிகளைக் கருத்துட்கொள்ளல்வேண்டும். ஒவ்வொருவனும் தானிருக்கின்ற நிலைமைக்கு ஏற்றவாறு தன்னையேவிட உயர்ந்து விவகரிப்பதற்குவேண்டிய செவ்விகளைக் கைக்கொண்டு ஒழுகுவானாயின், அவன் அறிந்தேனும் அறியாமலேனும், தன் வாழ்க்கையின் பொருளைக்கண்டு பயன்செய்து கொண்டவனாகின்றான் என்ன இவர் எடுத்துக்காட்டும் இதுஆழ்ந்த சிந்தனைகளை அளாவி நிற்கின்றது. இப்படித் தானென்னும் சிறு எல்லையினின்றுங் கழன்று மேனோக்கி உயர்வதற்குக் குடும்பவாழ்க்கை எத்துணை அழகாக அமைந்திருக்கின்றதென்பதை அறிந்துகொள்ளாதார் அவலம் அடைகின்றனர். குடும்பவாழ்க்கை அமைதியற்றுச் சிதைந்ததாயின் அப்பொழுதே அவன் வாழ்நாள் வீணாயிற்று என்றுவிடலாம். இவ்விழுவை ஈடுசெய்து வைக்கவல்லது வேறு எதுவும் இல்லை. ஒருவன், வெளியில் எத்துணைப் பேரும் புகழும் செல்வாக்கும் பெற்று நடமாடினாலும், வீட்டினுள் நுழைந்தவுடன், மனைவி மக்கள் உற்றார் பெற்றார் உறவினர் ஆயினோரும், இவனை அண்டிப்பிழைப்பவர் வேலையாட்கள் அனைய ஏனையோரும், வந்த இவனைக்கண்டு முகமலர்ந்து ஒளிர்வதும், அவர்களைக் கண்டு இவன் முகமலர்ந்து ஒளிர்வதும் நேரவில்லையாயின், பிறகு அவன் தன் வீடுதேடி வருவதனினும் நேரே இடுகாடுதேடிச்சென்று சேர்ந்திருத்தலே நலம். இஃதில்லையாயின் இவனுக்கு இருக்கின்ற செல்வங்களெல்லாம் பிறவிப்பயனைப் பொசுக்குதற்கு அடுக்கிய விறகுகளே. இஃதில்லையாயின் இவனுடைய பேரும் புகழும் செல்வாக்கும் இவனைப் பரிகசித்து “அழகு காட்டும்” பேய்க் கணங்களே. வறுமையோ குடும்ப அமைதியி னின்பத்திற்கு ஒருபோதும் இடையூறாக இருக்காது. இரவுச்சோற்றிற்குவழியில்லாநாளிலும், அன்போடு அளவளாவி வாழும் அவன் குடும்பத்தினர் அவ்வறுமையே தம் பிறவியின் பயனோவென்ன எண்ணி, இனிதுகாண்பர் அவ்வறுமையின் இயல்புணர்ந்தோர். இப்படிஒரு குடும்பம் அமைதியுற்றஇன்பத்தினதாய் அதனைச் சேர்ந்தவர் தத்தம்மில் உயர்வது பெரும்பாலும் அக்குடும்பத்தின் தலைவனது ‘கல்சரையும்’ அதனால் பெற்றுள்ள குணங்களையும் சார்ந்ததாக இருக்கும். குறிப்புப் பேரேடுகளும், ஆபீஸ் பைல்களும், வழக்குக்கட்டுகளும், வர்த்தமானப் பத்திரிகைகளும் தாழ்ந்தஇனத்து நாவல்களும் தவிரவேறுபடித்தற்கு அறியாதார் நடத்தும் குடும்பத்தில் நன்மொழியும் நகைமுகவும் நடமாடுமாயின் அதனை உலகத்தின் மிகப்புதிய அதிசயமாகக்கொள்ளலாம். வில்ரோன்ட் மனைவாழ்க்கையில் ஈடுபட்டு அதன்கண்ணே தம்பிறவியின் பொருளையும்பயனையும் காண்கின்றாரெனின் அதற்கு அவருடைய அளப்பரிய கல்வியும் ‘கல்சரும்’ காரணமாகின்றன என்பதை இயம்பவேண்டா. இவைதாம் இவரை உயர்த்திவைத்திருக்கின்றன. தனக்காகக் குடும்பம் என்பதல்லாமல் குடும்பத்திற்காகவே தான் இருக்கின்றான் என்ற மரபு எவன் வாழ்க்கையில் இழைந்திருக்கின்றதோ அவன்தான் வாழ்க்கையின் பயனை அனுபவிக்கின்றவனாகின்றான்.

தமிழ்ப்பாடம் 141.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[630-வது பக்கத் தொடர்ச்சி]

இவ்வண்ணம் இமையவரை மணக்குமாறு தூது உரைத்தநளனது மொழிகளைக்கேட்டதமயந்தி நாணமெய்தி வருத்தமொடு எருத்தங்கோட்டிநிற்க அவள் தோழியர் எதிர்மொழி விளம்பலுற்றார்:—

ஆற்றல்சா னளனே யன்றி
    யாருயிர் பிறிதின் றென்னும்
வேற்றடங் கண்ணி னாடன்
    மெய்பதைத் தாவி சோரச்
சாற்றிய மாற்றந் தன்னாற்
    றழலுமிழ் தறுகட் பேழ்வாய்க்
கூற்றுவன் றூத னென்று
    கூறிய தியற்கை யாமே. 66

உரை:- ஆற்றல்சால்-பராக்கிரமம்மிகுந்த, நளனே அன்றி-நளனையேதவிர, ஆர் உயிர்-தனக்குப் பொருந்திய உயிர், பிறிது - வேறே, இன்று என்னும்- இல்லை என்று எண்ணியிருக்கின்ற, வேல் - வேல் போன்ற, தட - விசாலமான, கண்ணினாள் தன்-கண்களையுடைய தமயந்தியின், மெய் பதைத்து - உடல் பதைத்து, ஆவி சோர - உயிர் சோரும்படி, சாற்றிய - நீ சொன்ன, மாற்றம் தன்னால் - வார்த்தையினால்—தழல் உமிழ்-நெருப்பை உமிழ்கின்ற, தறுகண் - அஞ்சாமையையும், பேழ்வாய் - பெரிய வாயையும் உடைய, கூற்றுவன் - யமனுடைய, தூதன் என்று - தூதனாக வந்திருக்கின்றாய் என்று, கூறியது - உன்னைச் சொல்லிக்

கொண்டது, இயற்கை ஆகும் - தகுதியே ஆய் விட்டது.

விரிவுரை:—நயமிகவுடைய சொற்கள் நவிலக் கற்றவர் தமயந்தியொடு அவள் தோழிமார்கள். 'இரக்கமின்றி இவ்வுரை நீ இயம்பலாமோ,' என ஏசுவாராகி "தமயந்தியின் மெய்பதைத்து ஆவியும் சோரும்படி உரைக்கின்றநீ,யமதூதன் என்று வந்ததுஎல்லாப்படியாலுந் தகுதியாயிற்று" என்கிறார். இது வடமொழியில் சமாலங்காரம் என அழைக்கலாகும் தகுதிஅணியின்பாற் படும். (7—532). முன், 'அநங்கனென்று உரைப்பதற் கையமில்லையே' என்றும், "கோதைமார் முகம்மாமதிஎன்பதும் மன்னன்செய்யகண்தாமரை என்பதுந் தக்க வாயவே" என்றும் வந்திருப்பனவும் இவ்வணியே. தான், 'இந்திரன் அக்கினி வருணன் யமன்' ஆகிய தேவர்களுக்குத் தூதுவனாக வந்திருக்கின்றானென்று நளன் கூறியதில் 'யமதூதன்' என்ற தொடர் சேர இயன்றது இதற்கு ஆதாரமாற்று.

வையக மொருகோ லோச்சி
 வான்புகழ் நிடதங் காக்கு
மையனை மணப்ப தன்றி
 யரிமதர் நெடுங்கட் செவ்வாய்த்
தையல்வே றொருவர் நாமஞ்
 சாற்றினு மாற்றா ளாகி
வெய்யசெந் தழலின் மூழ்கி
 விளிவதற் கைய மின்றே. 67

உரை:— வையகம் - பூமி முழுவதும், ஒரு கோல் ஓச்சி - ஒரே செங்கோல் செலுத்தி, வான் - சிறந்த, புகழ் - புகழ்பெற்ற, நிடதம் - நிடததேயத்தை, காக்கும் - காக்கின்ற, ஐயனை - நளவேந்தனை, மணப்பது அன்றி - மணப்பாளே அல்லாமல், அரி - செவ்வரி படர்ந்த, மதர் - மதர்த்த, நெடும் கண் - நீண்ட கண்களையும், செவ்வாய் - சிவந்த வாயையும் உடைய, தையல் - தமயந்தியானவள், வேறு ஒருவர் - (தனக்குக் கணவனாவதற் குரியவனென்று) வேறொருவனுடைய, நமம் - பெயரை, சாற்றினும் - சொன்னாலும், ஆற்றாள் ஆகி - பொறுக்கமாட்டாதவள் ஆகி, வெய்ய - கொடிய, செம் தழலில் - சிவந்த நெருப்பில், மூழ்கி - விழுந்து, விளிவதற்கு - சாவதற்கு, ஐயம் இன்று - சந்தேகம் இல்லை. (என்று தோழியர் கூறினர்).

குறிப்பு:—நிடதம் + காக்கும் = நிடதங்காக்கும்:— இது இரண்டாம்வேற்றுமைத் தொகையாகையால், நிலைமொழி யீற்று மகரமெய் வருமொழிமுதல் வல்லினமெய்க்கு இனமாய்த்திரிந்தது( )நாமம் + சாற்றினும் = நாமஞ் சாற்றினும், என்று ஆனதும் அவ்வாறே.

என்றவர் மொழிய வேந்த
 னியம்புவா னெரியின் வீழ்ந்து
பொன்றில்வெங் கனலி தன்னைப்
 புணர்ந்ததாம் புகன்ற செந்தீ
யன்றிவார் புனலின் வீழ்ந்துள்
 ளாருயிர் விடுத்தா ளேனுந்
துன்றுசீர் வருணன் றன்னைத்
 தோய்ந்ததாய் விளையு மன்றே. 68

உரை: —என்று - என்று, அவர் - அத்தோழியர், மொழிய - சொல்ல, வேந்தன்-நளவேந்தன், இயம்புவான் - பின்வருமாறு கூறுவான். "எரியின் - நெருப்பில், வீழ்ந்து - விழுந்து, பொன்றில் - அத்தமயந்தி இறப்பாளேயானால், வெம் - வெப்பமுடைய, கனலி தன்னை - அக்கினிபகவானை, புணர்ந்தது ஆம் - அவள் கூடியது ஆகும். புகன்ற - நீங்கள் சொல்லிய, செம் தீ அன்றி - சிவந்த நெருப்பில் விழாமல், வார் - நீண்ட, புனலின் வீழ்ந்து - நீரில் விழுந்து, உள் ஆர் - அவளுக்குப் பொருந்தியுள்ள, உயிர் - உயிரை, விடுத்தாள் ஏனும் - விட்டாலும், துன்று - மிகுந்த, சீர் - சிறப்பையுடைய, வருணன் தன்னை - வருணபகவானை, தோய்ந்ததாய் - கலந்ததாய், விளையும் - முடியும், அன்றே - அன்றோ!

விரிவுரை:—தமயந்தியைத்தான் இழப்பதோ இல்லை என்பது நிச்சயமானபின் நினைத்தபடி பேசி விளையாடத் தலைப்படுகின்றான் நளன். உங்கள் தலைவி தீயில் விழுந்தாலென், கடலில் வழுந்தாலென்? அக்கினியும் வருணனும் வேண்டுவதெல்லாம் அதுதானே. 'பழம் நழுவி அவர்களுக்குப் பாலில் விழுந்தது போலாம் அது. இனி இதனைச்செய்ய அவள் இசைவாளாயின் செய்யட்டும்" என அவன் அசதியாடினான்.

அன்றியுங் கனலி சான்றா
 யல்லது வதுவை யாற்றற்
கொன்றமோ வருண னெவ்வா
 துதகமோ டளிக்குந் தூய
மன்றலெவ் வாறு முற்றும்
 வானவ ரருளில் லாமற்
றுன்றுநீர்ப் புவியி லார்க்குஞ்
 சூழ்வினை முடிக்க லாமே. 69

உரை:—அன்றியும் - அதுவன்றியும், கனலிசான்றாய் அல்லது - அக்கினிசாக்ஷியாயல்லாமல், வதுவை ஆற்றற்கு ஒன்றமோ - விவாகம்செய்வதற்கு முடியுமோ; வருணன் - வருணபகவான், ஒவ்வாது - மனம் இசையாமற் போனால், உதகமோடு அளிக்கும் - நீர்த் தாரைவார்த்துக்கொடுக்கும், தூய மன்றல் - தூய்மையான விவாகம், எவ்வாறு முற்றும் - எப்படிமுடியும்; (ஆகையால்) வானவர் - தேவர்களுடைய, அருள் இல்லாமல் - அருள் இல்லாமல், துன்று - அடர்ந்த, நீர் - நீரை உடைய கடலால் சூழப்பட்ட, புவியில் - பூமியில், யார்க்கும் - எப்படிப்பட்டவருக்கும், சூழ்வினை - நினைத்த காரியத்தை, முடிக்கல் ஆமே - முடிக்கக் கூடுமோ (என்றான் நளன்).

விரிவுரை:—தேவர்களைப்பகைத்துக்கொண்டு பின் வேறொருவனைத் தமயந்தி மணப்பதென்பதோ இயலாது என விளையாட்டாய்க் காட்டுகின்றான் நளன் சாக்ஷிக்கு அக்கினி வரமாட்டான்; கன்னிகாதானத்திற்கு வருணன் வந்து உதவவோமாட்டான். எனின் வதுவை முடிவது எங்ஙனம் எனத் தான் தூதாக வந்த கருமத்தை வற்புறுத்துவான்போல்கின்றனன்.

வேயினைப் பழித்த மென்றோள்
 வேற்றடங் கண்ணி னுடை
னேயபே ரழகு மாந்த
 ரிருகண்ணு னேக்க வற்றோ
தீயுமிழ் வைர வொள்வா
 ளேந்திய தேவர் கோமா
னயிரங் கண்க ளாலு
 நோக்குதற் கமைந்த தன்றே. 70

உரை:—வேயினை - மூங்கிலை, பழித்த - நிந்தித்த, மெல்தோள் - மெல்லிய தோள்களையும், வேல்-வேல் போன்றதும், தட - பெரியதும் ஆன, கண்ணினுள் தன் - கண்களையும் உடைய தமயந்தியின், ஏய - பொருந்திய, பேர் அழகு-பெரிய அழகானது, மாந்தர்-மனிதர்களின், இரு கண்ணால் - இரண்டுகண்களால், நோக்க அற்றோ - பார்க்கத் தகுந்ததோ! (மற்று) தீ உமிழ்- நெருப்பைக் கக்குகின்ற, வைரஒள்வாள்-ஒளி பொருந்திய வஜ்ராயுதத்தை, ஏந்தி - ஏந்தியிருக்கின்ற, தேவர் கோமான்- தேவர்களுக்குத் தலைவனை இந்திரன், ஆயிரம் கண்களாலும்- தன் ஆயிரங்கண்களாலும், நோக்குதற்கு- பார்ப்பதற்குத் தகுந்ததாய், அமைந்தது-அமைந்திருப்பதாகும்(என்றான்நளன்).

விரிவுரை:—"தமயந்தி, இரண்டுகண்களேஉடைய இம்மண்ணுலகமக்களில் எவரைமணந்தாலும்,முழுதும்பார்க்கப்படாமல்அவளழகுவீணாகும்;ஆயிரம் நயனங்களுடைய இந்திரன் ஒருவனே மணந்தாற்றான் தன் அழகின்முழுப்பயனையும் அவள் தனது கணவனுக்கு அளித்தவளாவாள்; ஆதலால் அத்தேவர்கோமானைமணப்பதே தக்க அறிவாகும்" எனக்கூறினான் என்பது இச்செய்யுளின் கருத்து.

வெந்திறற் களிநல் யானை
விதர்ப்பர்கோ னளித்த மாதைத்
தந்துயி ரளித்தி யென்னத்
தனியிரு விசும்பு காக்கு
மிந்திரன் கேட்ட போதி
லெண்ணிய வனைத்து நல்கு
மைந்தரு வழங்கி னும்மா
லன்றென மறுக்க லாமோ. 71

உரை:—'வெம் - கொடிய, திறல்-பராக்கிரமத்தையும், களி - மதத்தையும் உடைய, நல் - நல்ல, யானை-யானைகளை யுடைய, விதர்ப்பர் கோன் - விதர்ப்பர்களுக்கு அரசனான வீமராஜன், அளித்த - பெற்ற, மாதை-பெண்ணாகிய தமயந்தியை, தந்து-கொடுத்து, உயிர்- தன்னுடைய உயிரை, அளித்தி-காப்பாற்று', என்ன - என்று, தனி-ஒப்பற்ற, இரு - விசாலமான, விசும்பு - ஆகாயத்தை, காக்கும் - காக்கின்ற, இந்திரன் - இந்திரன், கேட்டபோதில் - கேட்பானேயானால், எண்ணிய அனைத்தும்- எண்ணியவைகளையெல்லாம், நல்கும்- கொடுக்கும், ஐந்தரு- பஞ்ச தருக்கள், வழங்கின் - தமயந்தியை இந்திரனுக்குக் கொடுத்துவிட்டால், நும்மால்- உங்களால், அன்று என- அது வேண்டாவென்று, மறுக்கல் ஆமோ - மறுக்கக்கூடுமோ! (என்று நளன் கூறி முடித்தான்).

விரிவுரை:—"மாதர்காள், உங்கள்தோழிதமயந்தி இந்திரனை மணக்கப்படாதென்று மறுப்பதெல்லாம் அந்தத்தில்வீணாகலாம்.இந்திரனே ஐந்தருவேந்தன், அத்தருக்களோ எண்ணிய அனைத்தும்நல்குந்தன்மையன. இந்திரன் தன் காதலுக்கு இத்தமயந்திஇரங்காளாகில், பின்னர் அவன் அத்தருக்களிடம் சென்று, 'கற்பகமே, எனக்குத் தமயந்தியைத் தா" என்று கேட்டுவிடலாம். கற்பகமோ கொடுத்துவிடும். பின் நீங்கள் என்னசெய்வீர்.ஆகையால் எப்படியும் இந்திரன் தமயந்தியை எய்திவிடக் கூடியதாயிருக்க, இப்படி வலிந்து கொள்ளும்வண்ணம் நிகழாமல் தமயந்தி தானே மணத்திற்கு இசைந்தவள்போல் நடப்பதே நன்மையாகும்" என்று காட்டினான்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[633-வது பக்கத் தொடர்ச்சி]

பகழியால் மற்றவர் பெறுவரோ பயன்களே

மூலகாரண மாகிய முழுமுதற்பொருள் தன் சித்தத்தை நடத்தியதென்னும்பெற்றியை வாலீ நேர் முகமாகக் கண்டுகொண்டான். அம் முழுமுதற்பொருள் தனக்குரிய சீலத்தினின்று பிறழ்ந்திலது. அப்பொருளின் சரமல்லால் தருமம் பிறிது வேறு அதற்கில்லை; அதன்சித்தமல்லால் அதற்குச்சீலம்வேறில்லை. இதனையுணராவிட்டால் மருட்கையின்பிழை பெரிது நேரலாம். கம்பருக்குப் பின்வந்த பிரபுலிங்கலீலையில் ஓர் பாத்திரம் இப்பிழையை இழைத்தும் உளது.

அந்நூலில், அல்லமனைக் கண்டறிவேன் நானென்னச் சிவபிரானுடன் சூளுற்ற உமாதேவி தன் முக்குணங்களில்தமோகுணத்தவளை அழைத்துபுவியிடைச் சென்று அல்லமனைக் கண்டறிந்து வரும்படி விடுப்ப, அத் தமோகுணத்தி, வனவசைமாநகரில் அரசுகொண்டிருந்த மமகாரன்என்னும் மன்னனுக்கும்அவன் தேவி மோகினி யென்பவளுக்கும் ஒருபெண்மகவாய்ப் பிறந்து மாயை எனும் பெயரொடுவளர்ந்து மங்கைப்பருவமுற்றபோது, ஒருநாள் மத்தளிக வேடத்துடன் வந்த அல்லமனைக் கண்ணுற்று மையல்கொண்டு உழலுங்காலத்து,மலைமகள்,முன்சென்ற அத்தமோகுணத்தியின் நிலையைத்தெரிந்துவரும்படி ரஜோகுணத்தியாம் விமலை என்பவளை அனுப்புதலும்,இவ் விமலைவனவசைநகரமெய்தி மாயையைக்கண்ணுற்று அவள்பிறப்பையும் போந்துள்ளகருமத்தையும் உணர்த்தி "அல்லமனைக்கண்டறிந்து கைலைக்குமீளவேண்டியது உன் கருமமாயிருக்க, அதனை மறந்து நீயோர் மையலில் மூழ்கிக்கிடத்தலும் நேரிதோ" வென்னக் கழறுதலும், இம்மாயைஎன்பாள் தன்நிலையும்தன்மையும் இயற்கையேயாமெனக்காட்டுங்கருத்துடன்,

மூலகா ரணனெனச் சிலர்மொ ழிந்திடு
மாலுமோர் மானிடப் பிறப்பில் வந்துதன்
சீலமோர்ந் திலனெனிற் சிறிய பேதைநான்
ஞாலமேன் மயங்குத னவிறல் வேண்டுமோ

[மூலகாரணன் என்று சிலபேரால் கூறப்படுகின்ற திருமாலும் மானிடப்பிறவிஎடுத்துவந்தபோதுதன்சீலத்தைத் தெரிந்துகொள்ளாமற் போனான் என்றால் மிகமிகச் சிறிய பேதையாகிய நான் இந்தப் பூவுலகில் வந்து மயங்கியதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ]

என்னச் சாற்றினாளென்று சிவப்பிரகாச சுவாமிகள் பாடிவைத்திருக்கின்றார். கண்ணபிரான் முதலிலிருந்திறுதிவரையில் மானுடப்பிறவிஎனுமத்திரையினுட் பெரிதொன்றுங் கரத்தல்இன்றி மூலகாரணனாகவே முழுதும் நிகழ்ந்துவிட்டானாதலின், மாயை, இராமாவதாரத்தையே மனத்திற்கொண்டு பேசினாளென்று எண்ணுதல் வேண்டும். வாலியினிடத்தினல்லால் சீல மொழிந்தா னென்னுஞ் சொல் சொல்லப்படுதற்கும் இடமிருந்திலது. மற்று,'சீலமோர்ந்திலாதுஇராமன் இது செய்தனன்' என்றுசொல்வதாயின், மமகாரத்

திற்கும் மோகத்திற்கு மிடையே பெண்ணாய்ப்பிறந்து வளர்ந்த தாமதகுணமாகிய அம்மாயைக்கு நிகரான ஒருவர் சொன்னாற்றான் உண்டு என்பது சிவப்பிரகாச சுவமிகளின் கருத்தாகி இருக்கின்றதுபோலும். மற்று, அம்மாயைதானும் இரமசரிதத்தை யார்வாயால் கேட்டறிந் திருந்தனளோ அறியோம். கம்பராமாயணத்தை ஓதியிருப்பாளாயின் பின்னர் இது பேசியோ இருக்கமாட்டாள் திண்ணம்.

இராமனும் தன் சீலத்தை ஓர்ந்தனன்; வாலியும் அதனை ஓர்ந்துகொண்டவ னாயினான்; ஆதலின்,

மற்றினி யுதவி யுண்டோ
வானினு முயர்ந்த மானக்
கொற்றவ நின்னை யென்னைக்
கொல்லிய கொணர்ந்து தொல்லைச்
சிற்றினக் குரங்கி னோடுந்
தெரிவுறச் செய்த செய்கை
வெற்றா செய்தி யெம்பி
வீட்டர செனக்கு விட்டான்.

[வானினும் உயர்ந்த பெருமைவாய்ந்த வெற்றியுடையவனே, என் தம்பியாகிய சுக்கிரீவன் என்னைக் கொல்லும் பொருட்டு உன்னை அழைத்துக்கொண்டுவந்து, பழைய இந்தச் சிற்றினக்குரங்காகிய என்னோடு அறிமுகம்செய்துவைத்த செய்கையால், பயனற்ற இம்மண்ணரசை அவன் அடைந்து மோக்ஷ சாம்ராஜ்யத்தை எனக்கு விட்டான். இதனைவிடச் செய்யக்கூடிய உதவி வேறொன் றுளதோ] என்னஉய்த்துநனியுணர்ந்துஇயம்பவல்லதோர்மெய்யுணர்வு இராமனது சரம்பாய்ந்தநெறியூடே அவனிதயத்துள் சென்றுதங்க இயல்வதாயிற்று. எம்பெருமான் சிலருக்கு முத்தியைத்தன் கரத்தினா லளிக்கின்றான், சிலருக்கு அம்முத்தியைத்தன் சரத்தினால் செருகுகின்றாள். இருவகையினாலும் அவ்வருட்பெரும் பரமன் கொடுப்பது முத்தியே,சாதம். மற்று,இன்னவர்க்கு அதனை இன்னவகையில் தருவதற்கு உளங்கொண்டிருக்கின்றான் என்பதையேனும், ஏன் இவர்க்கிது இவ்வகையி லெய்தியதென்பதையேனும் யாரே அறியவல்லார்! அதனை அறியத்தான் வேண்டாவே! மாந்தரிங்கு எய்தும் இன்பமும் துன்பமும் அவள் கருணையின் காரியங்களே என்பதை ஓர்வதொன்றே கோடிபெறும்.

இராமபாணம் வாலியை வீட்டரசிற்கு உய்த்துச் செல்வது சிறிது பின்னர். அதன் முன்னரே,

ஓவிய வுருவ நாயே னுளதொன்று பெறுவ துன்பாற்
பூவிய னறவ மாந்திப் புந்திவே றுற்ற போது
தீவினை யியற்று மேனு மெம்பிமேற் சீறி யென்மே
லேவிய பகழி யென்னுங் கூற்றினை யேவ லென்றான்.

[சித்திரம்போன்றவடிவமுடையவனே, எளியேன் உன்னிடத்தில் பெற்றுக்கொள்ளவேண்டிய வரம் ஒன்று உளது—இந்தச்சுக்கிரீவன் மலர்களில் உண்டானமதுவைக் குடித்து அறிவுவேறுபட்டபோது கெட்டகாரியம்செய்வானாலும், என் தம்பியாகிய அவன்மேல் கோபங்கொண்டு, என்மேல் இப்பொழுது ஏவிய இவ்வம்பென்னும் எமனைச் செலுத்தாதிருப்பாயாக—என்றான்]

இராமபாணம் வாலியை இவ்வளவு தூய்மை செய்திருக்கின்றது. அத்தூய்மையின் மேன்மைஇதனினும் உயர்தல்அரிது. சுக்கிரீவன் கொல்வித்தஉயிர் போக, இன்னுமொரு உயிர் இருந்தாலும் அதனையுந் தன் தம்பியின்பொருட்டுக் கொடுப்பதற்கு விரைந்து வருவான் இந்தவாலி. அருகிருந்து இதனைக் கேட்ட இச்சுக்கிரீவன், தன் தமையனை இத்துணை மேன்மை செய்த அவ்வாளி தன்னைத் தைத்ததில்லையே என்னுமொரு அழுக்காற்றினால் அவசமுற் றிருந்தாலன்றி அவன் கண்ணும் இதயமும் உடலமும் முழுவதும் அழுதுஅழுது நீராகிக் கரைந்துருகித் தீர்ந்திருத்தல் வேண்டும்.

அன்னவாறு சுக்கிரீவன் கண்ணழியக் கலுழ்ந்து நின்றனனோ அல்லனோ அறியோம். வாலி விழுந்தபின் அவனை வீழ்வித்த தம்பியோ வாய் திறந்திலன். அவன் யாது செய்தானெனக் கம்பரும் சாற்றினாரல்லர். இவ்விதம் சிலவற்றை நம் ஊகத்திற்கு விட்டுவிடுதல் நாடகக்கலையினோர் கையாள்கின்ற நல்லசூழ்ச்சிகளுள் ஒன்று. எனினும், தன்னுடைய செய்கையின் விளைவைத் தெரியக்கண்ட அச்சுக்கிரீவனது சிந்தனை இக்களத்தினில் யாவதாங்கொல் என எம்மனோரால் எண்ணியுரைத்தல் மிகவும் அருமையாயிருக்கின்றது. முன்னே, வாலியின் மார்பினின்று பெருகிய குருதி வெள்ளத்தைக் கண்டவளவினில், உடன்பிறப்பென்னும்பாசத்தாற் பிணிப்புண்ட அச்சுக்கிரீவன், நேசத்தாரைகள் சொரிதரத் தரையில் வீழ்ந்தானென்றனர் கம்பர். அதுமுதல் இதுகாறும் வெந்துயரால் அவசமுற்று அத்தம்பி தரையிற்றானே கிடந்தனன்என்ன மதிக்கவல்லதாம்படி, வாலி, "இருந்தனன் இளவல் தன்னை வன்துணைத்தடக்கைநீட்டி வாங்கித் தழுவிக் கொண்டான்" என்றுபின் கூறப்பெற்றிருக்கின்றது. இராமபாணத்தினால் தள்ளூற்ற வாலி அத்தரையிற்றானே கிடக்கின்றான் அன்றி எழுந்திருந்தானல்லன் என்பது, பின்னர், கிடந்த வாலியின்மீது அங்கதன் வந்து வீழ்ந்தானெனப் பகர்வதால் நிச்சயம். ஆயின் கீழே தரையிற்கிடக்கின்ற வாலி, சுக்கிரீவனும் அவனருகு கிடந்தாலன்றி அவனைத் தன் தடக்கைநீட்டி வாங்கித்தழுவிக்கொள்ள இயலுமோஎன்னும் ஐயம் விளைவது இயற்கையே. அவ்வாறு தழுவிக்கொண்டு, "குன்றினும் உயர்ந்த தோளாய் வருந்தலை" என்பதனால், சுக்கிரீவனும் வருத்தமுடன் விழுந்திருந்தான் என்னா எண்ணற்கும் இடமுளது. எனினும் சுக்கிரீவன் எந்நிலை மனத்தினன்அல்லது எவ்வயின் இருந்தனன் என்று எண்ணுதற்கு அவகாசம்தருதலின்றியே நமது நினைவனைத்தையும் வாலியின்மீதே கம்பர் வாங்கி வைத்துளர். 'வருந்தலை' என்பது, "நீ வருந்துகின்றாய் அல்லை" என்னவும் பொருள்படக்கூடுமாதலின், வருத்தம் தேக்காத முகத்துடன் இருந்த சுக்கிரீவனை நோக்கிய வாலி சிறிது வியந்து அன்னது கூறி இருத்தலும் அமையும். மற்று, சுக்கிரீவனோ துன்பமின்றி இருந்தாலும், பெருந்தகைவாலியின் கண்களுக்கு அவன் தன்பொருட்டுத் துன்பம் மிக வுறுவதாகவே தோன்றுமாதலின், 'வருந்தாதே' என்று தேற்றலாவதும் வியப்பன்று. இன்னவைகளோடு இணைத்து நோக்க மற்றுமொன் றியம்புதற் குளது.

"வெற்றா செய்தி எம்பி வீட்டர செனக்கு விட்டான்" என்று மகிழ்ந்த அப் பரிவருத்தனையில் வாலியின் இலாபத்திற் காதாரமாயிருந்தது இராகவன் எய்த அப்பகழியே. இதனை நினைவுறுத்தப்பெறுகிற சுக்கிரீவன், தனக்கும் அவ்வாளி வாய்த்தாலாகாதோ. என்றவேட்கையனாய்த் தோன்றிஇருக்கலாம். எனின் "என்மேல் ஏவிய இப்பகழியை அவன்மீது ஏவற்க" என்று வேண்டுகின்ற வாலி, தன் தம்பியினது பிழை

யைப் பொறுத்து அவனுக்கு நன்றி செய்துவிடுகின்
றனா அல்லது, வீட்டரசு தன் தம்பிக்கு ஒருநாளும்
வாய்த்தலோ ஆகாதென்று, பிழைபொறுக்குமொரு
வியாஜத்தால் அப்பிழைக்குரிய பழியை மிகவும் ஆழ்
ந்ததோர்சூழ்ச்சியில் வாங்கித்தான்விடுகின்றனா என்
னுமொரு ஐயமே அச்சுக்கிரீவன் எய்தினனேல் அது
வும் தகும். வீட்டரசிருக்க, இராமன் ஏவுகூர் வாளி
யால் எய்து வாலிக்குத் தந்தருளிய அறிவு சுக்கிரீவ
னுக்கு வாய்க்கப்படாதென்றோ,இங்ஙனம்ஒருவரம்
வாலி கேட்டனன்! இராமனது அம்பிற்கு இலக்கா
வதனினும்நன்மையோ பிறிதில்லை என்னும் உறுதியு
டைய வாலி, தான் அறிந்ததும் கண்டதும் அடைந்
ததும் தன் தம்பிக்கு வாய்க்கலாகாதென்று உலோ
வியது என்னவோ! சுக்கிரீவன் இவ்வகையே எண்ண
மிட்டிருப்பானாயின்,தன்தமையனைக்கொல்வித்ததனி
னும் கொடியதோர் குற்றமாம் அது. இராமபாணத்
தால் வாய்க்கவல்ல நன்மை சுக்கிரீவனுக்கு வாய்க்கா
மல் வெற்றரசே அவனுக்கு எஞ்சவேண்டுமென்பது
அனைய சிறியனசிந்தித்திரான் தத்துவப்பேறுபெற்ற
இவ்வானரச்செம்மல். தன் தம்பியின் குணங்களும்
இயல்பும் வாலிக்குச் செவ்விதின்தெரியும். தன்னைப்
போல் ஆவிபோம்வேளையிலேயாயினும்அறிவுபெறத்
தக்க பக்குவத்தன்அல்லன் அச்சுக்கிரீவன்என்பதை
உணர்வான்.ஆதலின், இராகவன்வாளி சுக்கிரீவனது
மருமத்தில் அழுந்தநேருமாயின் அது அவனுடைய
உயிரைப்போக்குமேயன்றித் தத்துவஅறிவினைச் சுக்
கிரீவனுக்குத்தந்து உதவாது என்பது வாலிக்கு நிச்ச
யம்.இராமபிரானைநெடிதுநாள்வழிபட்டுப் பின்னரே
அவன் மெய்ஞ்ஞானம் பெறுவதாயின் பெற்றிடல்
கூடும். எனின்; "என் தம்பி பக்குவமடையாதவன்,
ஆதலின் என்மேல் எய்த பகழியை அவன்மீது பாய்
ச்சாதே" என்பதுதான் வாலி கேட்கும் இவ் வரத்
தின் உயர்வும் உண்மைக்கருத்துமாகும்.மற்று,வாலி
இன்றுவேண்டியஇவ்வரத்தில் உறுதிவைத்தோ பின்
சுக்கிரீவன், பூவியல் நறவமாந்திப் புந்தி வேறுற்று,
இராமனது பணியை மெற்கொள்ளாமல் தாழ்க்கத்
துணிந்தது. தம்பியின் தன்மையெல்லாம் தெற்றெ
னத் தெரிந்தவாலி வருவதுஉணர்ந்துதான் இவ்வாய்
மையை விளம்பினன்போலும். வருவது உணர்ந்த
வாய்மை இதுவாயின், சென்றதுதெரிந்த நீர்மையும்
வாலியின்பாற் காணலாம். கூறுவான் இவன்—

இன்னுமொன் றிரப்ப துண்டா
லெம்பியை யும்பி மார்கள்
தன்முனைக் கொல்வித் தானென்
றிகழ்வரேற் றடுத்தி தக்கோய்
முன்முனே மொழிந்தா யன்றே
யிவன்குறை முடிப்ப தையா
பின்னவன் வினையின் செய்கை
யதனையும் பிழைக்க லாமோ

[இன்னும் ஒரு வரம் நான் உன்னிடம் வேண்டிக்கொ
ள்ள இருக்கின்றது. அது என்னவென்றால், தன் தமைய
னைக் கொல்வித்தவன் என்று எனது தம்பியை உன் தம்பி
மார்கள் இகழ்வார்களாயின், தகவுடையவனே, நீ அவர்க
ளைத் தடுத்தருள். ஐயா, இவன் குறையை முடிப்பதாக நீ
முதல்முதலிலேயே வாக்குக்கொடுத்துவிட்டாய்அன்றோ;
பிறகு அவன் காரியமாக நீ செய்த இதனை அவனுடைய
பிழையாகக் கொள்ளலாமோ]

இது முன்னரே நிகழ்ந்தாகிவிட்டதே. மாற்றான்
எனத் தன்முன்னைக்கொல்வதற்குக் கொடுங்கூற்றுவ
னைக் கொணர்ந்துநின்ற சுக்கிரீவனை இலக்குவன்இரா
மன்பால் இகழ்ந்தபரிசினை அறிந்துளன்போல் வாலி
யிதுபேசலுற்றான். 'என்மேல் ஏவிய பகழியை எம்பி
மேல் ஏவல்' என்ற வள்ளல்வாசகம் வாலியின்வாய்
நின்று வந்தபோது அருகிருந்த இலக்குவன், "ஏ,
பாவி, நீ கொல்வித்த பெருந்தகைத் தமையன் இவ
ன்தா னடா" என்பான்போல் சுக்கிரீவனைத் தீயெழ
நோக்கினன் என இந்நாடக நிகழ்ச்சியை நம் மனத்
தக்கத்தே சித்திரஞ்செய்துகொள்ளல் அவனது இ
யல்பிற்கு அயலாயதொன்றாகாது. இவ்வாறு வெகு
ண்டுநோக்கிய இளையவீரனைக்கண்ணுற்றபடியாற்றான்
இன்னதோர்வரமும் பெறுதலின்அவசியம்வாலிக்கு
த்தோன்றியிருத்தல்கூடும். ஆயினும் செவ்வியசீற்றங்
கொள்கின்ற இந்தத் தம்பியா,முடமுடைக்காரணம்
ஒன்று முயன்றுகூறினன் என்னும் ஐயமும்வியப்பும்
வாலியின் மனத்தகத்தே பிறக்கவும் அதுபற்றி இள
மென் சிரிப்பொன்றும் அன்னவன் முகத்தில் சேர்
ந்ததோவெனச் சிந்திக்கலாம். எனின், இலக்குவன்
வலிந்துரைத்தஅந்தவொருகாரணத்தைக்கொண்டே
சுக்கிரீவனை இகழ்கின்ற தன் தம்பியரை, இவ்விலக்
குவனே உள்பட, இராமன் தடுக்கலாம் என்று பரிக
சமாய்க்கற்பிப்பதுபோலும் நிற்கின்றது. "முதல்முத
லில் நீயே என்னைக்கொல்வதாக வாக்குக் கொடுத்து
விட்டாயாதலால், என்னைக் கொல்வித்தவன் என்ற
பிழை என்தம்பியைச் சாராது காண்; ஐயா, இதனை
நினைத்துக்கொள்" என இராமபிரானுக்கு இயம்பிய
வாங்கே வாலியினது கடைக்கண்நோக்கம் அவ்விலக்
குவன் நிலையினைச் சோதிக்குமாறு பாய்ந்திருக்கும்.
இலக்குவனதுகட்டுரையை மனத்துட்கொண்டு வாலி
அமைவுறுமனத்த னாயினனல்லன் என்னற்கு இச்
சிறுநிகழ்ச்சியும் ஏற்றவோர்சான்றாக அமைகின்றது.

சுக்கீரவனுக்கு இச்செய்கையில் உதவிகள்செய்து
துணைவனாய்உற்றுஅமைந்தவன் அனுமன். அவனும்
அயலில்நிற்கின்றான். அவனது பெருமை யனைத்தும்
தெரிந்திருந்தும் யாதும் உரையாமற் றீர்வது அழகு
அன்றென்று அறிந்தவாலி,

மற்றிலெ னெனினு மாய வரக்கனை வாலிற் பற்றிக்
கொற்றவநின்கட்டந்துகுரக்கியற்றொழிலுங்காட்டப்
பெற்றிலன்கடந்தசொல்லிற்பயனிலைபிறிதொன்றேனு
முற்றதுசெய்கென்றாலுமுரியனிவ்வனுமனென்றான்

[கொற்றவனே, வேறொன்றும் செய்வதற்குஇல்லாமற்
போயினும், வஞ்சனையுடைய அரக்கனாகிய இராவணனை
வாலிற் கட்டிக்கொணர்ந்து உன்னிடம்கொடுத்து, எனது
குரங்குத்தனத்தைக் காட்டும் பாக்கியம் பெறாதவன் ஆயி
னேன். கடந்துபோனதைச் சொல்லிப் பயனில்லை. குரங்
குத்தனமல்லாதவொன்றையோ அல்லதுகுரங்கியலுக்குத்
தகுந்ததையோ எதனைச் செய்கஎன்றாலும் அதனைச் செய்
வதற்கு உரியவன் இந்த அனுமன்—என்றான்]

எல்லார்க்கும் பகையும் உறவும் யாவும்இராமனே
என்பதைத் தேர்ந்தபின் வாலிக்குப் பகையாயினோர்
யாரும் இலர்; ஆதலினால், அனுமன் றன் பகையனைத்
தையும் மறந்தான் வாலி; மறந்து அவனது ஆற்றலை
யே பாராட்டலாகின்றான். குரங்கியல்தொழிலினோடு
ஏனைய பிறவும் வல்லன் இவ்வனுமன் என்னுங்கால்
வாலி எவ்வெவற்றைத் தன்மனத்தில்வைத்துப் பேசி
யிருத்தல் கூடும் என்பதை இக்காலம் ஊகித்துரைத்
தல் இயல்வதொன்றன்று. இன்னும்,

அனுமனென் பவனை யாழி
யையநின் செய்ய செங்கைத்
தனுவென நினைதி மற்றென்
றம்பிநின் றம்பி யாக
நினைதியோர் துணைவ ரின்னோ
ரனையவ ரிலைநீ யீண்டவ்
வனிதையை நாடிக் கோடி
வானினு முயர்ந்த தோளாய்

[சக்கிராயுதத்தை யுடைய ஐயனே, அனுமன் என்கின்ற இவனை நினது செம்மையான சிவந்த கையில் ஏந்திய வில்லைப்போலநினைத்துக்கொள். என் தம்பியாகிய சுக்கிரீவனை உன்னுடைய தம்பியே யாக நினைத்துக்கொள். இவர்கள் போன்ற துணைவர் வேறு வாய்க்கமாட்டார். வானத்தைவிடஉயர்ந்த தோள்களையுடையவனே நீ இப்பொழுது சீதையைத் தேடி அடைவாய்]

என்று சாற்றினான். வளைத்தபடி வளையும் என்னும் தன்மையிற்போலும் அனுமன் இராமன் கைத் தனுவிற்கு நிகராவது.

மூடர்களின் மூளை

புத்தியின் மேன்மையை எல்லா மனிதர்களும் ஒத்துக்கொள்கின்றனர். பைத்தியக்காரர்கள் தவிர வேறு யாரும் இதைப்பற்றிச் சந்தேகம் கொள்வதில்லை, கொள்ளவும் முடியாது. ஆனாலும், சந்தேகிப்பதானால் எதையும் சந்தேகிக்கலாம். ஆகையால், புத்தியின் மேன்மையைப்பற்றியும் சந்தேகம்கொண்டவர்போல் இரண்டொருவர் பேசினும் பேசலாம். எனினும், ஒருவனுக்குப் புத்தி அவசியமோ வென்று சந்தேகப்படுகின்றவனுமதனைத் தன்புத்தியைக்கொண்டு தானே ஆராயவேண்டும். ஆராய்ந்ததை அவன் புத்திகொண்டு தானே எடுத்துப் பேசவேண்டும். எடுத்துப்பேசியதை மற்றவரும் தம்புத்தியைக்கொண்டுதானே தெரிந்துகொள்ள வேண்டும். ஒருவனுக்குப் புத்தி அவசியமில்லை என்று கூறுகின்றவன், தான் புத்தியைக்கொண்டு அப்படிச் சொல்லவில்லை என்று விளம்பிவிட்டானாயின், பிறகு அப்பேச்சிற்கு என்ன மதிப்பு இருக்கின்றது!

உண்மை அன்பு நல்லுணர்வு முதலியவைகளே புத்தியின் திறமையைவிட உயர்ந்தவைகளாமென்று ஒருவன் கூறலாம். அப்படிச் சொல்கின்ற அது ஒரு புத்திசாலித்தனமான பேச்சாகவேனும் இருக்கவேண்டும், புத்தியில்லாத பேச்சாகவேனும் இருக்கவேண்டும். புத்தியற்ற பேச்சேயென்றால் அதனை உடனே தள்ளிவிடலாம். புத்திசாலித்தனமான பேச்சாயிருந்தால், புத்தியின் மேன்மையினாலேயே அந்தவிஷயத்தைத் தெரிந்துகொண்டானல்லவா! நாம் புத்திசாலிகளாக இல்லாவிட்டால் நம்முள்ளே இருந்து நம்மை ஒரு காரியத்திற்குத் தூண்டியது, சத்தியமா அன்பா நல்லுணர்வா அல்லது அந்தப் பெயர்களை வைத்துக்கொண்டு நடமாடுகின்ற சில பொய் நோக்கங்களா என்பதை எப்படித் தெரிந்துகொள்ளக் கூடும். புத்தியின் உதவியாலல்லாமல் நல்லுணர்வு எதுவென்றும் பொல்லாதவுணர்வு எதுவென்றும் நாம் அறிந்துகொள்வதெப்படி. சில பகைகளை அன்பு என்றும், சில் பொய்ப்பாவனைகளைச் சத்தியமென்றும் நாம் கொள்ளாமல் இருக்கின்றோம் என்ற நிச்சயம் ஏற்பட வேண்டுமானால் அதற்குப் புத்தியின் உதவி அவசியமாகிறதே!

சிறந்த அறிவுடையவன்தான் சத்தியமான வாழ்க்கையை நடத்தக் கூடும்; அவனேதான் உண்மையான அன்புடையவனாக இருக்கக்கூடும்; அவன்தான் தன் உணர்வைநல்ல வழியில்செலுத்தவுங் கூடும். மூடர்கள், தம் இராகத்துவேஷங்களின் காரியமாகத் தோன்றும் மூர்க்கத்தால் ஒன்றை விடாப்பிடியாய்ப் பற்றிக்கொண்டு, தாங்கள் சத்தியக் கொள்கைகளையும் அன்பின் நெறியையும் கடைபிடித் திருக்கின்றார்கள் என்று எண்ணிக்கொள்வார்கள். தாம் தர்க்கம்பிறழ்ந்துவந்த தப்பான முடிவுகளைத் தம் உணர்வின் ஊக்கம் என்று கொண்டாடுவார்கள். "அறிவின் திறமையெல்லாம் எதற்கு வேண்டும்; நம் உணர்வு நம்மைச் செலுத்துகின்ற வழியே சென்றால் போதாதா" என்கின்ற ஒருவன் செய்கின்ற காரியங்களை ஆராய்வோமானால், உணர்வு என்னும் அது இன்னதென அவனுக்கு எள்ளளவேனும் தெரிந்ததில்லை என்பது புலப்படும். "அறிவைத் தள்ளிவிட்டு என்னுடைய இயற்கையின்படியே வாழ்கின்றேன்" என்று நம்பியிருப்பான் ஒருவன்; பார்க்கப்போனால், அந்த இயற்கையென்பதே இன்னதென்று தெரியாமல் அவன் செயற்கையாகச் சேர்த்துக்கொண்டதொன்றாயிருக்கும் அது. தன்வாழ்க்கைக்கு ஆதாரமாகச் சத்தியத்தையோ, அன்பையோ, உணர்வையோ, வேறு எதனையோ, தெரிந்தெடுத்து அமைத்துக்கொள்ள அறிவின் திறமைவேண்டுமே. உண்மையில், அறிவை வெளியே தள்ளிவிட்டுவேறு எதனையேனுமொன்றை அதற்குப் பதில் தன் வாழ்க்கைத்துணையாக அழைத்துக்கொள்ளப் புகுகின்றவனுக்கே, வேறு யாரையும்விட, அறிவானது அதிகமும் அவசியமாக இருக்கின்றது. ஒருவனது வாழ்க்கையை நடத்துவதற்கு அறிவு அவசியமில்லையென்றும் அவனவன் மனச்சாக்ஷியேபோதும் என்றும் சொல்லுவார் சிலர். இந்த வாக்கியம் எழுதிப் படிப்பதற்கோ அழகாகத்தான் இருக்கின்றது; அக்கருத்து நேரானது அன்று என்றும் ஒருவரும் வாதிக்கவும் மாட்டார். ஆயினும், எது மனச்சாக்ஷி எது மனச்சாக்ஷியில்லை என்பதைத் தெரிந்துகொள்வதற்குப் போதிய அறிவில்லாதவொருவன், தான் தன் மனச்சாக்ஷியையே ஆதாரமாகப்பற்றி வாழ்வதாகச் சொல்வதை நம்பி அவனோடு வியாபாரம் வைத்துக்கொள்ள எவ்வாறு துணிவது? "தர்க்கத்திற்கெல்லா மேலானது தம் மனச்சாக்ஷி" என்பார். ஆம், அதனிற் சந்தேகமில்லை; என்றாலும், இந்த வாசகத்தை நம்பி வாழ்கின்றவர்களில் ஒரு சிலர், "தற்கத்திற்கெல்லாம் மாறான" ஒன்றைத் "தற்கத்திற்கெல்லாம்மேலானது" என்னப் பிறழ மதித்துப் பாழாவதைப் பார்த்துவருகின்றோம். அறிவிற்கு மேலானவற்றைப் பற்றி வாழ வேண்டும் என்று எழுந்து அதற்குக் கீழானவைகளிலழுந்தி உழல்வதே எங்கும் நிகழ்கின்றது.

ஆகையால், அறிவிற்குமாறாகச் சொல்வார்சொன்னாலும், உண்மையில் மனிதர் அனைவரும் அறிவின் மேன்மையில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது முன் சொன்னவைகளால் தெரியவருகின்றது. ஆயினும், அறிவு அல்லது புத்தி என்பது என்ன, என்னும் பழைய கேள்வி தீர்ந்தபாடில்லை. இதைப் பற்றிய அபிப்பிராய பேதங்கள் அனந்தம்!

அறிந்துகொள்ளக்கூடியபடி அறிவின் இலக்கணத்தை வகுத்துரைக்கக்கூடியவர்கள் எக்காலும் கிடைப்பதருமை. வகுக்கின்ற இலக்கணமெல்லாம் மீண்டும் அக்கேள்வியையே பிச்சையெடுத்துக்கொண்டு வந்ததாக முடியுமே அல்லாமல், அதற்குவிடைகொடுத்ததாகாது. நமக்கு இருக்கின்ற அறிவை அதன்பயனால் நாம் தெரிந்துகொண்டால் உண்டே ஒழிய, அறிவையே நேராக இன்னதென்று தெளிந்துகொள்ள இயலாது. ஆயினும், அறிவினது பலன்கள் இவையிவை என்பதிலும்அபிப்பிராயபேதங்கள் பலஏற்படலாம். அதற்கென்னசெய்வது! அறிவு இன்னதென்பதைக் காட்டிலும் அதன்பலன்கள் இன்னவையென்பதில் அபிப்பிராய பேதம் அத்துணை அதிகமாயிருக்காது என்பதை நினைத்துத் திருப்தியடையவேண்டும்.

இதுஎவ்வாறாயினும், அறிவினதுஆட்சியைக் கவர்ந்துகொள்ளும்பொருட்டுவரக்கூடியசிலகள்வர்களுக்காளாகாமல் நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும். இத்தகையகள்வர்களில்ஒருவன் இக்காலம்மிகப்பெருமிதத்துடன் தோன்றித் "திறமை"என்னும் பெயருடன் நடமாடுகின்றான். "மூளையின் திறமையும்," "அறிவின் நுட்பமும்" ஒன்றேதானோஎன்பதைச்சிறிதாராய்ந்து தெளிந்துகொள்வது நலம்.

அறிவானது ஏறிநடத்துகின்ற குதிரைபோன்றது என்று திறமையைக் கூறலாம். இதனால் அவை இரண்டும் ஒன்றே அல்ல என்பதும் சொல்லப்பட்டதாகும். குதிரையின் குணத்திற்குத் தக்கவாறு அதனை உகைப்பவனுடைய ஆற்றலும் அமைந்திருக்கவேண்டுமென்பது அவசியம். குதிரை உயர்ந்தசாதிக் குதிரையானால் அவனும் ஆற்றலுடையவனாகவே இருக்கின்றானென்கின்ற நியதியில்லை. குதிரையும் குணமுடையதாய் அவனும் ஆற்றலுடையவனாய் அமையும்போது அந்தச் சாரத்தியம் மிகவும் அதிசயிக்கத்தக்கதாக இருக்கும். குதிரையின் குணத்திற்கு அவனுடைய ஆற்றல் குறைந்ததானால் அப்பொழுதும் இந்தச் சாரத்தியமும் அதிசயிக்கத்தக்கதாயிருக்கலாம். எனினும் இது வேறானது; அந்தர குட்டிக்கரணங்களும்உடைந்தகழுத்துக்களும்இந்தச்சாரத்தியத்தில் காணவேண்டி நேரும்.

ஒருவன் பருத்து முதிர்ந்த மூளையையுடையவனாயிருப்பினும் மிகப் பெரிய மூடனாகவும் இருக்கலாம் என்பதில் சற்றேனும்சந்தேகமில்லை. மிகப்பெரியதன் முதிர்ந்தமூளையை எவன் தப்பாகநடத்துகின்றானோ அவனே மிகப் பெரியமூடன் ஆவானென்று கொள்வதே நேர். மூளையை உடைத்தாயிருப்பது வேறு, அம்மூளையை நேராகநடத்துவதுவேறு. மூளைமுதிரமுதிர அது நேராகவும் நடத்தப்படும் என்ற நிச்சயமும் உடன்வளர்கின்ற முறையொன்றும் காணப்படவில்லை.

இந்த உலகத்தில் உள்ள எல்லாரினும் அறிவாளி இவன்தானென்னும்படி ஒருவனையும், அப்படியே மூடன் இவன்தானென்னும்படி இன்னொருவனையும் நீ சிருஷ்டிக்கவேண்டும் என்று கட்டளையிடப்பட்டால், உனக்கிட்ட காரியத்தை எப்படித் துவக்குவாயோ அறியேன். என்வரையில் நான் என்ன செய்வேன்என்பதை வேண்டுமானால் சொல்லலாம். சொல்கின்றேன்.

சிறிதுதூரம் வரையில் இவ்விரண்டுபேர்களையும் சிருஷ்டிசெய்வதில் என்னுடைய முறை ஒரேவிதமாகத்தான் இருக்கும். அவ்விருவருக்கும் பெரிய முதிர்ந்த மூளைகளைக் கொடுத்து முடிப்பேன். அதற்கப்புறந்தான் இனி என்ன செய்வதென்று தெரியாமல் விழிப்பேன். ஒருவனை நோக்கி, 'அப்பா, இவ்வுலகில் உன்னைவிட அறிவாளி இல்லையென்னும்படி நீ நடந்துகொள்வதற்கு வேண்டியவொன்றைக் கொடுத்திருக்கின்றேன்" என்று எடுத்துக்கூறுவேன். அப்படியே மற்றவனைநோக்கி, "அப்பா, இவ்வுலகில் உன்னைவிட முழுமூடன் வேறெங்கும் இல்லையென்னும்படி நீ நடந்துகொள்வ்தற்கு வேண்டியவொன்றைக் கொடுத்திருக்கின்றேன்" என்று எடுத்துக்கூறுவேன். ஆயினும், அவன் அறிவாளியாகவும் இவன் முழுமூடனாகவும் தவறாமல் நடப்பதற்கு வேறும் ஒன்றுஅவசியமாயிருக்கின்றது. அதனைத்தான் எப்படிச்செய்வ்தென்று தெரியவில்லை. அறிவாளி ஒருவன் ஆவதற்கு மூளைமாத்திரம் அல்லாமல், இலத்தீன் புலவர் டான்டே என்பவர் கூறும் வண்ணம், **அறிவின் நன்மையும்** அவசியமாயிருக்கின்றது. மூளைவளரவளர இந்த **நன்மையும்** உடன்வளர்கின்றதெனும் நிச்சயமோ இல்லையே! ஆகையால் நான் செய்திருப்பதெல்லாம் என்னவென்றால், அறிவின் ஒளியும் மடமையின்இருளும் இரண்டும்இயல்வதாகும்படியான ஒரு கருவியை இந்த விருவருக்கும் தனித்தனி கொடுத்திருக்கின்றேன் என்பதே. ஆயினும், ஒருவனிடத்தில் அறிவும் மற்றவனிடத்தில் மடமையும் தோன்றித்தான் தீரவேண்டுமென்பதற்கு என்ன செய்வதென்பது யான் அறியேன். ஒன்று நிச்சயம். அவன் அறிவாளியாவனாயின், நான்கொடுத்த மூளையைக்கொண்டே அவன் அவ்வாறு ஆகியிருத்தல்வேண்டும்; இவன்மூடனாயின் இதுவும் நான்கொடுத்த அம்மூளையைக் கொண்டே. இன்னமொன்று நிச்சயம்: அவன் அறிவாளியாவானாயின் அவ்வறிவு மகத்தான அளவினதாக இருக்கும்; இவன் மூடனாவானாயின் இம் மூடத்தனமும் அப்படியே.

இங்குக் கூறியவைகளிலிருந்து, மனிதனுக்கு வாய்த்திருக்கின்ற கருவிகளிலெல்லாம் நேராக நடத்துவதற்குமிகவும் கஷ்டமானது மூளையே என்னும் முடிவு விளங்க வரும். அதனைத் தப்புமுறையில் நடத்துவதற்கு அதிகம் இடமுண்டு; அப்படியே தப்பாக நடத்தினால் பெறுகின்ற தண்டனையோ மிகக் கொடியது.

ஆயினும் சிலர் இதனை மறந்து, மூளையானது தன்னைத் தானே நடத்திக்கொள்கின்ற ஒரு கருவியாகுமென்றும், வெளியினின்று அதனை நடத்துவதற்கு ஒன்றும் அவசியமே இல்லையென்றும் வாதிக்கலாம். மூளை தப்பாக நடக்காதபடி வெளியிலிருந்து அறிவு என்னும் வேறுஒன்றை உதவிக்குஅழைக்கவேண்டும் என்பதனிலும் பேதைமை வேறு இல்லை என்பார் அவர். அவர்களுடைய எண்ணத்தின்படி, மூளையானது தன்னுடைய காரியத்தை நடத்துவதற்கு வேண்டிய அறிவைத் தானே விளைவித்துத் தந்துகொள்ளுமாம்: முதிர்ந்தமூளை அந்த முதிர்ச்சியினாலேயே சீராக நடத்தப்பெற்றதாகும்—என்றெல்லாமென்னை மறுப்பார் அவர்.

இதுதான் தற்காலத்திய கொள்கை; பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்படுவதும் இது;ஆயினும்,

இந்தக் கொள்கையை உண்மையென்றுகொள்வதற்குப் பல இடையூறுகள் இருக்கின்றன.

ஒவ்வொரு மூளையும் தன்னைத்தானே நேர்மையாக நடத்திக்கொள்ளக்கூடிய ஒரு கருவி யென்பது உண்மையானால், ஒரு மூளை இன்னொரு மூளையின் காரியத்தில் தலையிட என்ன நியாயம் இருக்கின்றது? முன்னேசொன்னபடி என்னை மறுக்கப்புகுகின்றவர் அப்படித்தானேசெய்கின்றனர். இந்தக் கட்டுரையில் நான் சொல்லியிருக்கிற கருத்துக்களில் தம்முடைய தலையையிட வழிதேடுகின்றார்கள்—மறுப்பதுஎன்று கூறுவதன் பொருள் அதுதானே. என்னைப்பார்த்து; "ஐயா, இந்த விஷயத்தைப் பற்றி நீ கூறும் தப்பான கருத்துக்களிலிருந்து, உன் மூளையை நீ நேராக நடத்தவில்லை யென்பது தெரிகின்றது. இந்த இடத்தில் உன்மூளை தப்பாகவே போய்விட்டது. ஆகையால், அது இப்பொழுது தான் போகின்ற வழியைவிட்டு எங்கள்மூளை செல்கின்றஇவ்வழியையே பின்பற்றட்டும்; அதன் பிறகு எல்லாம் நேராய்விடும்" என்பது தானே அவர் என்னை மறுப்பதன் சாரமாகும். ஒவ்வொரு மூளையும் தன்னை நடத்துவதற்கு வேண்டிய அறிவைத் தானே விளைவித்துக்கொள்ளும் என்கிற கொள்கைக்கு இணங்கினால் அவர் இப்படி என்னைப் பார்த்துச் சொல்ல உரிமையில்லையே. மூளையினின்று விளைவதே அறிவு என்பது உண்மையேயானால், ஒருவன் மூளையின் விளைவானதுமற்றொருவன்மூளையின் விளைவைவிட நல்லதாகவோ கெட்டதாகவோ இருப்பதற்குக் காரணமே இல்லையே. பெரியமூளை அதிகமாக விளைவிக்கும், சிறியமூளை குறைவாக விளைவிக்கும்; மற்று, இந்த இரண்டுமூளைகளிலிருந்தும் விளைந்த பயிர் கெட்டதாக இருக்குமானால் என்ன செய்வது? சிறுத்த மூளையே அப்பொழுது சாலச் சிறந்ததென்ன வேண்டும்.

"இல்லை, இல்லை, உன்னுடையமூளையைவிட எங்கள் மூளை மிகப்பெரியதும் அதிகம்முதிர்ந்ததும் ஆகி இருக்கின்றதென்பதை மறந்து விடுகின்றாயே" என்பார் என்னுடைய மறுப்பாளிகள். "இருக்கலாம், அதனாலென்ன? நீங்கள் தக்க காரணங்கள் காட்டி நிரூபிக்கும்வரையில், உங்கள் பெரிய முதிர்ந்தஅம்மூளைகள் பெரிய முதிர்ந்த பிழைகளைச் செய்வதற்கே கருவிகளாக விருந்தாலோ, என்னும் சந்தேகத்துடனேயே நான் இருக்கவல்ல உரிமையை இழந்துவிடவில்லை. நீங்கள் சொல்வதே பிழையென்று வைத்துக்கொள்வோம். உங்கள் மூளை மிகப் பெரிதாக இருப்பதால் அந்தப்பிழையும் மிகப்பெரியதாக வேண்டுமல்லவா? பெரியதொரு பிழையைச் சாதிப்பதற்கு வேண்டிய குதர்க்கங்களைக் கண்டுபிடிப்பதுதான் அதனாற் கண்ட பயன். பக்கத்துப் பட்டினத்தில் இருக்கும் எந்திரச்சாலை பெரிதாகவும் உயரமாகவும் அமைந்திருப்பதாலேயே, அது செய்கின்ற செருப்புக்கள், தெருவின்ஓரத்தில்உட்கார்ந்துகொண்டு ஒருசக்கிலிதைக்கின்றசெருப்புக்களைவிடச் சிறந்தனவென்று கொண்டு விடலாமா? இல்லையே. சக்கிலிச் செருப்பு ஒன்று தேய்வதற்குள் எந்திரச்சாலைச் செருப்புக்கள் மூன்று தேய்ந்து விடும். உங்களுடைய பெரியமூளைகளுக்கும் என்னைப் போன்றவர்களுடைய சிறிய மூளைக்கும் இருக்கின்றவேற்றுமை இன்னதே. அளவில்உங்கள் மூளை பெருத்திருப்பினும் குணத்தில் எங்கள் மூளை சிறந்திருக்கின்றனவென்று எங்கள்சார்பாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இதற்கிடையில், உங்கள் பெரிய மூளைகளைக்கண்டு பயந்து நடுங்கிவிடுகின்றவர் நாங்கள்அல்லர். ஒருவன் காலின் நீளத்தையே கண்டு ஒரு கடவுளும் மகிழமாட்டார்; அப்படியே அவன் மூளையின் அளவைக்கண்டும் அவர் மகிழ்வதில்லை" என்று நான் என் மறுப்பாளிகளுக்கு எஞ்சாமல் எதிருரைப்பேன்.

ஆகையால், நிமிர்ந்த நெற்றியும் பருத்த மண்டையும் எத்தனைதான் பெருகினாலும் இவ்வுலகில் கடவுளின்இராச்சியம் கைவந்ததாகாது. பேயின் ஆட்சி பெருகுவதற்கும் அன்னதே அடையாளமாகலாம். இதைப்பற்றி யாரும் சந்தேகப்பட்டதில்லை. பெரிய பெரிய அளவில் அயோக்கிய காரியங்கள் செய்வதற்குப் பெரிய பெரிய மூளைகளே ஏற்ற கருவியென்பது வெட்டவெளிச்சமாகிஇருக்கின்றது. அதுவன்றியும் நான் இன்னமும் ஒன்று சொல்லத் துணிகின்றேன். அயோக்கியனுக்கு மாத்திரமல்லாமல் அசடனுக்கும் இம்மூளையே கருவியாய் நிற்கின்றதென்று கூறுகின்றேன் நான். முழுமூடமாகிய ஒரு முட்டாள்தனம் வெறும் மூடமாக மாத்திரம் இருப்பதில்லை. மிக்க திறமை வாய்ந்த மடமையாக இருக்கும் அது; மிக்க சூழ்ச்சியுடைய மடமையாக இருக்கும்; சாமர்த்தியமாக நடத்தி, சாமர்த்தியமாகச் சிந்தனைகள் செய்து, கணக்கில்லாத காரணங்களை ஆதாரமாகக் கொண்டு தோன்றுகிற இம்மடத்தனம், அம்மடையன் தன்னையொரு அறிவாளியென்று எண்ணிக்கொள்ளும்படி செய்யும்.

அறிவின் அவசியத்தையோ ஏற்றுக்கொள்வோம்; ஆயினும், மூளையில் நாம் வைத்திருக்கின்ற நம்பிக்கையைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அறிவும், மூளையின் திறமையும் ஒருதன்மையன ஆகமாட்டா. இவைஇரண்டையும் ஒன்றேஎன்று பாவிப்பதுதான் இக்காலத்துப் பிழைகளி லெல்லாம் மிகப் பெரியது.

மூளையை வளர்த்துக்கொள்கின்ற வகையிற்றான் மானுட முன்னேற்றம் அடங்கியிருக்கின்றதென்று சிலர் கருதுவார். அவ்வளவேயானால், அம்முன்னேற்றத்தின் முடிவு இப்பூவுலகில் மிகவும் திறமைசாலிகளான மூடர்கள் முளைப்பதேயாகும் என்று அஞ்ச வேண்டி நேர்கின்றது. மூளையின் வளர்ச்சியை அதிகமும் ஆமோதித்துப் பேய்களே பேசும்.

ஆங்கில நூலாசிரியர் L. P. ஜாக்ஸ் என்பவர் ஒருவர் எழுதியுள்ள ஒருகட்டுரையின் நேர்மொழிபெயர்ப்பு இது. அதனைத் தெரிவிக்காமல் தம்முடைய 'சொந்த' கட்டுரை போலவே ஸ்ரீமான் R. G. நாராயணமூர்த்தி எழுதியிருக்கின்றாரானாலும், இவ்விரகசியத்தை வெளிப்படுத்தவேண்டியது எம் கடமையாகின்றது. இக்கட்டுரையில் அடங்கிய விஷயங்கள் யாவராலும் ஆழ்ந்துசிந்தித்தற்குரியனவென்பதில் ஐயமில்லை.

—ஆசிரியர்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து, 10-ம் தசகம்
10-ம் பாசுரம்.

[640-வது பக்கத் தொடர்ச்சி]

சரணாகதி உபாயம் ஸர்வ சுலபமாயும் எல்லாரும் அனுஷ்டானம்செய்து உய்வு பெறலாம்போலவும் தோற்றுகின்றது. இதைச் சோதிப்போம். (1) முதல் முதல், பகவானிடத்திலு மவன் அடியாரிடத்திலும் பூர்ண ஸ்நேஹமும் விசுவாஸமும் வேண்டும். (2) தன் ஆத்மா அவனின் ஸொத்து, அவனுக்கே உரித்து அதைஅவன் கையில்அடைத்து அவனின் இஷ்ட விநியோகமாக்கவேண்டுமென்ற உள்ளாசை நிரந்தரமாக் கூடியிருக்க வேண்டும். தீர்ந்த சாஸ்திரஞானமானது ஸுசிக்ஷிதமாய் இல்லாமற்போனாலும் மேல்கண்டவளவிலேனு மறிந்திருக்கவேண்டும். உலகத்திலுள்ள விஷயங்களில் ஐம்புலன்களின் நுகர்ச்சிவேண்டாமல் வெறுப்புத்தட்டி ஆசை ஒழிந்திருத்தல் வேண்டும். புலனுகர்ச்சியி னாசைகள் தோன்றினபோதிலும் கடுக இவைகளை ஒழித்துவிட்டுப் பேரானந்தத்தை அடைய வேண்டுமென்ற திருட சித்தமும் தீவிரமான மனோ நிச்சயமும் எழவேண்டும். தனக்கு ஏற்கெனவே ஏற்பட்டுள்ள பக்திமார்க்கங்களில் இழிந்து முயற்சிகள் செய்து வரம்பெற ஏலாதென்ற தீர்மானம் மனதில் உதித்து, பக்தி மார்க்கத்தால் வெகு ஜன்மங்கள் கழித்தே தேர்ச்சியடையக் கூடுமாகையால் அந்நெடுவழி தொடர மனமில்லாமல் சரணாகதி மார்க்கமொன்றே தனக்கு ஒவ்வுமென்றுஆராய்ந்து மனமூன்றி நிற்றல் வேண்டும்.

மிகப்பல ஜன்மங்கள் எடுத்துச் சாதிக்கவல்ல பக்தி யோகமாகிய நெடுவழியில் நெறிவழுவுமன்றோ! அப்படி வழிதப்பிபோகுமென்ற சங்கை இவ்வுபாயத்தில் கலப்பில்லை என்ற திடவிசுவாசம்ஏற்பட்டு இந்நெறியில் இழிதல்வேண்டும். இவ்வண்ணமெல்லாம் மனத்தோற்றம் விசாலமடைந்து தன் இலக்குச்சேர ஆசை கடுக முடுக்கவேண்டும். ஆராய்ச்சிசெய்யுங்கால், அவனிரக்ஷிக்கும்படிகொடுக்கத் தனக்கு ஆத்மா உண்டென்றும், அதைக்காக்க உடையவனிடத்தில் கொடுக்க வேண்டுமென்று முலகவிஷயங்களில்வைராக்கியமும் ஜன்மங்களைத் தொலைத்துக்கொள்ளுவதிலும் அதன் பிறகு மோக்ஷானந்தம்அனுபவிப்பதிலும் தீவிர ஆசையும், உபாயத்தை அநுஷ்டித்துப் பீடுபெறவேண்டுமெனும் உள்ளந்தரங்கமும் ஏதோ ஆயிரத்தில் ஒருவருக்கே எழும், வாய்க்கும், கைகூடும். விவேகிகள் இந்தக் கருத்துக்களை யெல்லாம் கணிசித்தே அநேக விதங்களான பக்தியோகக் கவடுகளை விட்டுச் சரணாகதியில் இழிந்து அதி கடுக மோக்கம் ஸாதிக்கவல்லதென்று முயலுகின்றார்கள். குடியானவன் ஒருவன் ஒருதுண்டு நிலத்தைத் விவசாயம்செய்து ஒருகலம் எள்ளை வாரம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டுவர, அவன் மகன்— "தந்தை சொல்படி வேண்டா, யான் ஒருகலம் எண்ணெயாக வாரம்கொடுப்பே"னென்றுஏற்றுக்கொள்வதையே ஒக்குமென்று ஒரு பெரியார், இந்தச்சரணாகதி வெவ்வேறு உபாயங்களைவிடக் கஷ்ட ஸாத்தியமென்று உதாஹரணரூபமாகக்காட்டிக்கொடுத்தார்.

இனி, பாசுரத்துக்குப் பொருள் வரைந்ததன்பின்னர், இப்பிரபந்தத்தில் இவ்விஷயத்தில் ஆழ்வார்திருவுள்ளமாக ஆங்காங்குக் காணுவதையும் உபதேசங்களையும் மற்றைபதையும் எடுத்தெழுதுவோம்.

உரை:—இறையும் - ஒரு க்ஷண காலமானாலும், அகல - எப்போழ்தும் பெருமாளுடன் கலவை நடவாநிற்கச்செய்தேயன்றி அவனதுதிருமார்பை விட்டு நீங்க, கில்லேன் என்று - தான் சக்தியற்றவளென்று ஆதரவாலும் அனுபவிக்கும் அதிசய வின்பத்தாலும் அடிக்கடி சொல்லிக்கொண்டு அவனது திருமார்பை அநுபவிக்கின்ற, அலர்மேல் மங்கை - தாமரைப் பூமேலிருக்கின்ற நித்தியயுவதி வடிவான இலக்குமி பிராட்டி, உறைமார்பா - வஸியாநின்ற திருமார்பையுடையவனே, நிகரில் - ஒப்பிலாத, புகழாய் - (1) தாய்தந்தையர்கள் புத்திரர்களினிடத்தில் பாராட்டும் வாத்ஸல்யமும்(2)எல்லா ஜீவாத்மாக்களையும்இரக்ஷிககத் தீக்ஷையுடைய எஜமானத்துவமும் (3) எவ்வளவு தாழ்வான பக்தர்களுக்கும் இரங்கி அநுகூலிக்கும் தன்மையும்(4) எல்லாப்பக்தர்களிடத்தும் ஒரு நீராகக்கலக்கும் சுலபத்தையும்(5)ஸர்வஞத்துவமும் (6) ஸர்வ சக்தி தத்துவமும் (7) தன் ஸங்கல்பத்தை முடிக்கவல்ல ஆண்மையும் (8) எவ்வித அபசாரத்தாலும் தடைபெறாது உதவும் கருணையும் (9) எண்ணிச்செய்யாத சிறு பயனுக்கும் செய்நன்றி பாராட்டும் சுபாவமும் (10) பக்தர்கள் ஆழ்ந்து பஜித்தால் அவர்களிடத்தில் நிரந்தர பிரீதியும் (11) பரிபூர்ண ஐசுவரியமும், அதை உதவ (12) பரமோதாரத்துவமும், இவைபோன்ற மற்றுள்ள கல்யாணகுணங்களுமுடையவனாக வேதங்களில் புகழப்பெற்றவனே! உலகம் மூன்று உடையாய் - சேதநாசேதந ஜடவஸ்துக்களையும்லோகத்தையும்(அதாவது காணக்கூடிய பிரபஞ்சத்தையும்) ஸர்வ ஸ்வாமியாகவுடையவனே; இவைகளை ரக்ஷிக்கும் நிமித்தமே ஈசனாய்நிற்கின்றான் என்பதுபொருள். என்னை ஆள்வானே- உன்னுடைய குணங்களாலே என்னைத்தோற்பித்து என்னையடிமை கொண்டவனே? நிகரில் அமரர் - (தேவலோகத்துத் தேவர்களைக் குறிக்காமல் "நிகரிலமரர்" என்று வைகுண்டத்தில் பகவானை ஸர்வ பிரகாரத்தாலும் அநுபவிக்கும் "ஸதா பச்யந்தி ஸூரய:" என்னக் கூறியபடி ஸர்வமனோரதங்களும் திகட்டுதலில்லாமல் அநுபவிக்கின்ற) நித்திய ஸூரிகளும், முனிக்கணங்கள்- வைகுண்டத்திலேயே பகவானின் விஸ்மய அதிசய குணங்களில்மூழ்கிப் பூரணசூரியகிரணங்களைப்பார்க்கின்ற கண்கள் பார்வையை இழந்துவிடுவது போல் மனம் வாக்கு இவைகள் பகவானைத் தவிரவேறொன்றையும்சிந்திக்கக்கருமமற்றுத்திகைத்துநின்று, மௌனம் சாதிப்பவர்களும், விரும்பும்-மிகவும்ஆதரிக்கும்படியான (Note இருட்டறையிலே விளக்குப்போல் எம்பெருமானுடைய வாத்ஸல்யம் ஸௌசீல்யம்

காருணியம் ஆதிய குணங்கள் மிகவும் பிரகாசிப்பது ஸம்ஸாரிகள் வஸிக்கின்ற பூமியிலேயாகையால் இப்பூமியில் உள்ளவர் பகவானது குணப்பிரகாச அதிசயத்தை, பரமபதத்தில்வசிக்கும் நித்திய ஸூரிகளைக் காட்டிலும் மிகவும் நன்கு பாராட்டி ஆதரிப்பரென்பது கருத்து) திருவேங்கடத்தானே - வேங்கட மலையில் எழுந்தருளியிருந்து பக்தர்களுக்குத்தாழ்பவன் என்று கொண்டாடப்பட்டவனே. உன்னடிக்கீழ் - கீழ்ச்சொன்ன இலக்குமி ஸஹாயத்துவம் காருணியம் ஸௌசீலிய ஸௌலப்பியம்இக்குணங்களோடுகூடிய உன்னுடைய திருப்பாதங்களடியிலே,புகலொன்றில்லா-உன்சரணாரவிந்தங்கள் தவிர உய்யவேறு(கதி) உபாயமொன்றுமில்லாத, அடியேன் (1) உன் ஸொத்துஎன்றறிந்து உனக்கேஅடிமையாய்த்தீர்ந்தயான்-(Note நான் உன்னுடைய ஸொத்தானபடியாலும் என்னை ரக்ஷிக்கவேண்டியது உன் பாரமானதாலும் எனக்கு உன் பாதங்கள் தவிர்த்து வேறுகதி இல்லாமையாலும் வேறுபிரயோஜனத்தி லாசையில்லாமையாலும் தற்பொழுது ஒரு க்ஷணங்கூட வுன்னைவிட்டகன்றால் இறந்துபடுவேனாகையாலும் இத்தருணம் நீயே உதவிபுரிந்து என்னை இரக்ஷிக்கின்ற பாரத்தைச் சுமக்கவேணுமென்று கருத்து.]

(உன்னடிக்கீழ்என்றெடுத்தது ரக்ஷிக்கவல்லனென்பதைக் குறித்தல் நிமித்தம்) அமர்ந்து - நிலைபெற்று— அதாவது வேறு பிரயோஜனங்களை உன்னிடத்தில் பெற்றுக்கொண்டுஉன்னைவிட்டுச்சற்றேனும்போகாமலுன் கலவையிலேயே உருசிதட்டி உன்குணங்களின் இன்ப நுகர்ச்சியில் சலிப்பில்லாமலும் சலனமில்லாமலு மனுபவிக்க, புகுந்தேனே -நான் பிரவேசித்தேன், அதாவது என் புத்தியால் சரணமடைந்தேன். வேறு தமக்கு ஆசையோ பிரயோஜனமோ இல்லையென்று வற்புறுத்துகிறபடி. ஆறாயிரப்படி உரை, பாதங்களில் புகுவது எப்படியென்று ஆலோசித்துத் திருபாதங்களில் உள்ள ரேகைகள் போலே தாமும் "ஒப்புஉற" உறவாட அபேக்ஷிக்கின்றாரென்று குறித்திருப்பதன் பொருத்த மறியத்தக்கது.

குறிப்புக்கள்:—பகவானின் ஸொத்தாகிய ஆழ்வாரின் ஆதமவஸ்துவை அவனே இரக்ஷிக்கப்பிராப்தம். அப்பகவான்தான் "தனக்காகவேஎன்னைக்கொள்ளுமீதே" என்றபடியானால் ஆழ்வார் தமக்குப் பிரயோஜந சூன்னியரா யிருத்தல் வேண்டுமே? அப்படிக் காணாமல் ஆழ்வார் தாமே ரக்ஷையை அபேக்ஷிப்பானேனென்றுகேட்டால்: பலம்அவனைச்சேர்ந்ததானாலும் ஒருவியாஜத்தைக் கைபற்றியே மஹோ தாரனைபோதிலும்,"கொடுக்கக்குறைவிலன்வேண்டிற்றதெல்லாம் தரவல்ல னானும்" அவனை வசப்படுத்தச் சரணாகதி அனுஷ்டித்தாரேயன்றிவேறில்லையென்றுசித்தாந்தம். ஆழ்வார்தமக்குப் பலம் சித்திப்பது அந்தராயமாக நடுவழியிலே வருவதொன்றான பயன்.

II. இலக்குமி பிராட்டி சந்நதியில் ஆழ்வார்தம் ஆத்மாவை ஸமர்ப்பித்தது பெரியபிராட்டியார் புருஷாகாரத்தை வேண்டிக்கொள்வதின்நிமித்தம்-பெரிய ஸந்நிதானத்தில் யாரும் அணுகக் கூசுவது ஸஹஜம். அவ்விடத்தில் காரியம் ஸாதிக்க வேணுமானால் அவ்விடத்தில் பழகுகின்ற பெரியாரைத் துணைகொண்டு அவர்களின் செல்வாக்குப் பெற்று அணுகினால் ஏற்றத்திற்குஇடமாகும். இப்படிநடுவில்நின்று அப்பெரியாரையும் ஆச்ரயிக்கும் ஸாமானியர்களையும் சேர்ப்பித்துக் காரியம் முடிவுபெறச்செய்பவர்களுக்கு ஆரியத்தில் கடகர் என்று பேர். இவர் செய்யும் உபகாரத்திற்குப் புருஷாகாரம் என்பது பெயர். இலக்குமி பிராட்டியை ஆழ்வார் புருஷாகாரமாக வரித்ததற்குக் காரணம் அவள் பெயரின் ஸமாஸத்தின் அர்த்தங்கொண்டு நாம் நிர்வஹிக்கக் கூடும்.

I. "ச்ருணோதி" (கேட்கிறாள்)—"ச்ராவயதி" (கேட்பிக்கிறாள்) அபராதஅப்சாரங்க ளியற்றியிருந்தாராயினும் அடியார்கள், ஸர்வேசுவரன் திருவடிகளிலே தங்களைக் காட்டிக்கொடுத்தருளவேணுமென்று கெஞ்சுகின்றகுரல்களைக்கேட்டு ஸர்வேசுவரனுக்குத் தக்கபடி விண்ணப்பஞ்செய்து இவர்களின் வியஸநத்தையும் மனோவருத்தத்தையும் நீக்குவாள்என்பது பொருள்.(Note) "புருஷாகாரம்" என்பது தாழ்ந்த ஒருவர் வேண்டுகோளைப் பெரியாரிடத்தில் பரிந்து பேசி அப்பெரியார் வேண்டுகோளை ஏற்க இசைவித்துக் காரியம் சாதித்தல்.

II. (a) ச்ரயதே (b) ப்ராப்யதே என்னுமிவை— (a) அடையப்படுகிறாள்: அதாவதுமோக்கம்இச்சிக்கிறவர்கள் இவள்பரிவையும்கடாக்ஷத்தையும் வேண்டி இலக்குமிபிராட்டியை உபாயமாகப் பற்றுகிறார் என்று பொருளாகிறது. (b) அடைந்திருக்கிறாள்: மனம் இரங்கித் தாங்கள் உஜ்ஜீவிக்கவேண்டுமென்று மோக்கத்தில் ஆசைப்படுகிறவர்களின் மனஆசையைப் பூர்த்திசெய்விப்பதற்காகவே ஸர்வேசுவரனைஏற்கனவே ஆச்ரயித்திருக்கிறாளென்று பொருள்.

III. (a) போக்குகிறாள்; என்றும் — (b) பரிபாகத்தை உண்டாக்குகிறாள், என்றும் பொருள்படக்கூறுவார். (a) பக்தர்களின் பாபங்களின் காரியம், பகவான் பக்கம் சென்று அணுகக்கூடாமை - அவனே எல்லாச் சேதநர்களிடத்தும் ஸஹஜமாய்க் கருணையுள்ளவனானாலும் பாவங்களுக்குத் தண்டனை விதிக்கக்கூடியவனானதால் அவன் சீற்றத்தைஆற்றித் தாய்போல் பரிந்துபேசி, ஏதேனும் ஒரு வியாஜம் காட்டி அவனது கிருபைக்கு ஆளாக்குவதைத் தன் கடமையாக இலக்குமிபிராட்டி ஏற்றுக்கொண்டிருக்கிறாள். அநுமான், சீதாபிராட்டியைத் தடுத்துநின்று காவல் காக்கும் இராக்ஷஸப்பெண்களை ஒருநொடியில் கொன்றுவிடுவேனென்று கோபித்து ஆரம்பித்தபோது அப்பிராட்டி "க: குப்பியதே,' என்கோபம்? என்றும், "காரியம் கருண மார்யேண நகச்சிந் நாபராத்தியதி"—பெரியோர்கள் கேடுவிளைப்பவர்களிடத்திலே கருணைசெய்யவேண்டும், குற்றம்பார்க்கில் யார்தான் பகவானிடத்தில் அபராதம் செய்யாதவர்கள்" என்றும் வினவினா ளல்லவோ? (6) பக்தர்கள் இலக்குமியை ஆச்ரயிக்கத் தொடங்கினவாறே அவளது விசேஷ கடாக்ஷத்தால் தீயமனம் அகன்று அறிவு தெளிந்து நல்வினைநற்குணத்தில் மூட்டிப் பக்தர்களைப் பின்னே யடையும் பெரும்பேறுக்குத் திருத்தி யோக்கியமாக்குகிறாள். இதனாலவர்களை வைகுண்ட திவ்விய புருஷரோடு கலவைக்கு யோக்கியமாக்குகின்றாள்.

இவ்வண்ணம் சிக்ஷை அடைந்து தேர்ச்சியடையவே, துவயமந்திரத்தின் இரண்டாவது "கவடு" இலக்குவைத்துப்பேசுகின்றது. முதல்கவடு இலக்குமியின் புருஷாகாரத்தைஇலக்குவைத்துப் பேசுகின்றதென்பார் அறிந்தோர் - இம்மந்திரத்தின் பிரபாவத்தைப் பரக்கப் பேசப்போனால் வளரவிரியும். ஆகையினால் இனிஇவ்விடத்தில் ஆறாயிரப்படிகாரர்உரையைஎழுதுவோம்—"அளவுகடந்த காருணியக் கடலாய், ஸர்வஸ்வாமியாய் உன்னுடைய குணங்களாலே எனக்குஸ்வாமியாய்த் திருநாட்டிலே உன்பரிசரியகைங்கரியத்திலமர்ந்து ஆனந்த மடைகிற்வர்களும், உன் குணத்திலேயே ஈடுபாடுபட்டு அநுபவாநந்தம் அடைகிறவர்களும், உவமையற்ற நித்திய புருஷர்களுக்குங் கூட, அதிமனோஹரமான திருமலையிலே எந்த லோகங்களிலும்யாவருக்கும்தட்டுத்தடங்கலில்லாமல்சரணம் புக நின்றருளுவதும் செய்யும் உனது திருவடிகளை வேறுபுகல் ஒன்றுமில்லாமைபற்றி வேறு பிரயோஜனத்தில் ஆசையில்லாத அடியேன் பெரிய பிராட்டியார் புருஷாகாரமாகச் சரணம் புகுந்தேன்.இப்போதே சமஸ்ததடங்கல்கள் அடியேனைப்பாதியாமலொழிந்துஉன் திருவடிகளிலேஸர்வகாலமும் ஸர்வகைங்கரியமும்அடியேன்செய்யப்பெறவேண்டுமென்றார்."

தற்காலக் கொள்கைகளும் தமிழும்

[637 பக்கத் தொடர்ச்சி]

இந்தக் காலத்தில் தமிழ்க்கல்வியோ நாளுக்குநாள் நமதுதேசத்தில் விருத்தியடைந்துவருகின்றதென்று நம்மவர்களிக்கின்றார். ஆயினும் ஜன்னியில் ஒருமனிதன் எழுந்து நடத்தல் முதலிய செய்கைகள் எத்துணை உவகை உண்டாக்கக்கூடுமோ அத்துணை உவகையே இதிலும் ஆராய்ந்து நோக்கும் நம்மவர்க்குமாம். முற்காலத்தில் தமிழ்க்கல்வி என்பதும் நமது சமயம் என்பதும் பேதமில்லாமல் இருந்தது. தமிழ்அறிஞன் என்றால் ஞானி என்னும் பொருள் பொருந்தும். நம்பியாரூரர் நமதுமொழியின் மேன்மையைப் பின்வருமாறு சிவபெருமான்தோத்திரத்தில் விளக்குகின்றார்.

சேந்தமிழ்த் திறம் வல்லிரோ? செங்கணரவு
முன்கையி லாடவே
வந்து நிற்கு மிதென்கொலோ? பலிமாற்ற
மாட்டோ மிடகிலோம்!
பைந்தண் மாமல ருந்து சோலைகள் கந்த
நாறு பைஞ்ஞீலியீர்!
அந்தி வானமு மேனியோ? சொலு
மாரணீய விடங்கரே"

முற்காலத்தில் தமிழ்நாட்டுக்கே உரிய இசைவகையில் ஒன்று திறம் எனப்படும்.இது ஐந்துசுரங்களால் ஆக்கப்பட்ட ஒருவகை ஜன்னிய இராகமாம். பண், பண்ணியல், திறம், திறத்திறம் என நால்வகையாய் நமது இசையை எடுத்து விளக்குவார், அடியார்க்கு நல்லார். அத்தகைய தமிழ்த்திறத்தில் வல்லராய்ச் சிவபெருமான் இருந்ததால் அன்றோ, பாம்பைக்கையில் ஏந்தினாரென்று தமிழ் இசையை இவ்வளவு உயர்த்தி நம்பியாரூரர் பாடியிருக்கத் தற்காலத்தில் தமிழ் இசை என்னபாடு படுகின்றதென்று நமது இசைச் சேகரக் கருவிகளால் (Gramaphone records) காணலாம். இவ்வாறெல்லாம் நம்மவர் தமிழைப் படாத பாடுபடுத்தியும் அதனுடைய இயற்கைத் தத்துவமானது இன்னமும் முன்னோர்கள் ஒளியைக் காட்டவே முயன்று வருகின்றது. கம்பன் முதல் தாயுமானவர் வரையில் நூற்றாண்டுக்கு ஒரு முறையாவது முதல் தரக் கவிகள் தோன்ற ஆரம்பித்தனர். முன்சென்ற நூற்றாண்டில் இராமலிங்கசுவாமிகள் வெண்தமிழில் நமது நாட்டின் நிலைமையையும் நமது மொழியின் நிலைமையையும் விளக்கிக் காட்டலானார். அவருடன் அந்நடை மாண்டது. இக்காலத்துக் கவிகளை நான் புறங்கூற இங்குப் புகுந்தேனல்லேன். ஆயினும் இக்காலத்தில் நூதனமாய்த் தமிழில் வியக்கத்தக்கதாய் எழுந்தது வசனமே. தமிழ் வசனநடையைச் சுத்தப்படுத்திவியாசங்கள்எழுதுதற்குவழிகாட்டித்தந்தவர் காலஞ்சென்ற திருமணம் செல்வகேசவராய முதலியார் அவர்களே. அவர் தமிழ்வசனம் முக்கியமென்றும், அந்நடையைச்சீர் திருத்திப் பலநூல்கள் எழுதவேண்டுமென்றும்கூறியதைப்பின்பற்றிப் பலமொழிபெயர்ப்புக்களும் நவீனங்களும் ஏற்பட்டன.இக்காலத்தில் வழங்கிவருகின்றநவீனங்களுக்கோ (Tamil Novels) கணக்கில்லை. அவை விளைவிக்கின்ற துன்பங்களுக்கும் எல்லையில்லை. ஆயினும் சில சில நல்லநடையில் எழுதப்பட்டும், நன்னடக்கை போதிப்பனவாகவும் இருக்கின்றன. மாணவர்கள் அவற்றை ஆய்ந்துஎடுப்பதே நன்மையாம். மற்றும் சில மொழிபெயர்ப்புக்கள்மேல்நாட்டுப்பாஷைகளிலுள்ள அரிய நூல்களைப் பின்பற்றியும் தழுவியும் செய்யப்பட்டிருக்கின்றன. ஏனையமொழிகளிலுள்ள சாரங்களை நம்மவர்க்கு உதவும்படி நமது மொழியில் மொழிபெயர்ப்பது தமிழரின்கடனாம். இலக்கிய நூல்களின் மொழிபெயர்ப்பு மாத்திரமே அல்லாமல், கணிதம், இயற்கைத் தத்துவ சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், பல்வகை மிருக பட்சி இலக்கண நூல்கள், சரீரக்கூடு சாஸ்திரம், வைத்தியம், பூகோளம் ககோளம்முதலியன மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. காலஞ்சென்ற திருவாளர் பி. வி. மாணிக்க நாயகர் அவர்கள் ஆங்கிலத்தில் வழங்கும் கணித சாஸ்திரங்களை மொழிபெயர்க்க முயன்று பற்பல கணித அறிவியற் கட்டுரைகள் எழுதினார். இயற்கைத்தத்துவ சாஸ்திரங்களையும் அவ்வாறே மொழிபெயர்க்கப் பலர் முயன்று வருகின்றனர். ஆங்கிலத்தில் வழங்கிவருகின்ற அர்த்தசாஸ்திரமும் (Political Economy) தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இருக்கின்றது. இவ்வாறு தமிழ்வசன இலக்கியமானது மிகவும் வேகமாகவே விருத்தியடைந்து வருகின்றது. இதன் பயன் மேல்நாட்டுத் தத்துவசாஸ்திரங்கள்யாவும் முழுமையும் தமிழர்கையில் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குவதற்கேயாம்.

இன்னவாறு தமிழ்வசன இலக்கியங்கள் ஒருசார் விருத்தியடைந்து வர மற்றொரு புறத்தில், புதைந்து கிடந்த அரிய நூல்களை வெளியிட்டு யாருக்கும் எளிதில் கிடைக்கும்படி அடக்கவிலையில்பதிப்பிக்கஉழைத்து வரும் தொண்டரில் முன் வந்தார் சிலர். பத்து வருஷங்களுக்கு முன்னர்ச் சைவத் திருமுறைகள் பன்னிரெண்டு இவைஇவை எனவும், 14 சித்தாந்த சாஸ்திரங்கள் இவை இவை எனவும் சொல்லக் கூடியவர் நூற்றுக்கு ஒரு சைவர் கிடைப்பது கடினமாயிருந்தது. அவ்வாறு கிடைப்பினும் இந்நூல்கள் இருபத்தாறும் நாங்கள் கையில் எடுத்தோமென்று கூறக்கூடியவர்களைக் காண்பது மிகவும் அரிதாக இருந்தது.இப்போதோ அக்கஷ்டம்முற்றும்ஒழிந்தது. நம் சைவசித்தாந்த மகாசமாஜமும்சாது அச்சுக்கூடமும் ஒருங்குசேர்ந்து சைவருக்குள்ள ஒரு பெருந் தாகத்தைத் தீர்த்தன. இக்காலத்திலே நூல்கள் கிடைக்கவில்லை என்றாகிலும் வாங்குவதினால் பெருஞ் செலவு என்றாகிலும் கூற இடமில்லை. இவ்விரு நிலயங்களைப் போல ஏனைய நிலயங்களும் பற்பல இடங்களிலும் உழைத்துவந்தால் புதைந்திருக்கின்ற தமிழ்நூல்கள் மற்றும் பல வெளிவரும்.

பத்தாண்டுகளுக்குமுன்னர், கல்வெட்டு ஆராய்ச்சி (Archealogical Survey) இராஜாங்கத்தார் கையிலேயே இருந்துவந்தது. அதை ஆராய்ந்தோர் சிறந்த கல்விமான்களாயிருந்தும் அவர்களைப் பண்டைத்தமிழ் நூல்களில் மிக்க வல்லுனரென்று சொல்ல இடமில்லை. இக்காலத்தில் அரசாங்கத்தில்யாதொரு பதவியும் பெறுமலே தங்கள் அன்பும் ஆர்வமுமே துணையாகக்கொண்டு பலஇடங்களிற் சென்று ஆராய்ச்சி செய்யத் தமிழ் மாணவர்கள் புகுந்தனர். இப்பத்து வருடங்களாகத் திருவாளர் தி. கு. கி. நாராயணசாமி நாயடு அவர்கள் சைவசமயப் பற்றினால் ஆராய்ந்து எடுத்த கல்வெட்டுக்களின் அருமை தமிழ் மக்கள் யாவரும் அறிவார். இவ்வாறு நமது பழைய நாகரிகம், தேச சரித்திரம் முதலியவற்றை விளக்க ஆராய்ச்சித்துறைகளில்தமிழ்மக்கள் உழைக்கலானார்.

இலக்கியத் தத்துவ ஆராய்ச்சி (Literary criticism) என்னும் துறையில் முற்காலத்தில் தமிழர் இறங்கியதில்லை. சேக்கிழார் இலக்கிய தத்துவ ஆராய்ச்சியில் மிகவும் வல்லுனரென்பது பெரிய புராணத்தில் விளங்கும். அவர்காலத்தில் வழங்கிவந்த தேவாரப் பாடல்களில் சில வெள்ளிப் பாடலென அவர் அறிந்திருந்தும் அவை கன்ன பரம்பரையில் வழங்கிவந்த வைதீக மாந்தர் (அடியார்கள்) கதைகளில் பொருத்தமல்லவெனக் காணப்படினும் அவற்றை வெட்டி எறிந்துவிட அவருக்குத் துணிவு எழவில்லை. அவர் காலத்தில்மாத்திரமன்று அத்தகையபீதி(பயம்),சென்ற நூற்றாண்டிலும் உண்டு.சென்ற பத்துவருஷங்களாய் நம்மவர் அப்பயத்தை உதறிவிட்டார். உழுத சால்வழி உழாவிடின் வைதீகமாந்தர் தடியெடுத்துவருவதுவழக்கம். அத்தடியடிப்பயம்விட்டது இக்காலமே. இக்காலத்தில், கம்பன் கவிச்சக்கரவர்த்தியாயிற்றே என்று பயப்படுவதுல்லை. அவன் நூலிலுள்ள தோஷங்களை எடுத்துக்காட்ட இக்காலத்தில் நம்மவர் அஞ்சுவதுமில்லை. சைவத்திருமுறைகளில் பரம்பரையாகப் பாடிவந்தபதிகங்களில் இவைஇவைவெள்ளிப்பாடல்களெனக் களைவது குற்றமன்று எனச் சைவமக்கள் ஒப்புக்கொண்டது சில வருடங்களாகவேதான். ஆதலால் முன்னோர் அறியாத இலக்கியத் துறையாகிய இலக்கிய ஆராய்ச்சித்துறை தமிழில் தற்காலத்தில் விருத்தியடைந்து வருகின்றது. எனவே வசன-இலக்கியம் ஆராய்ச்சி-இலக்கியம் என்னும் இருவகைத்துறைகள் நமது இயற்றமிழில் இக்காலத்தில் விருத்தியாவதைக்கண்டு நாம்களிக்கலாம்.

இனி நமது இசைத்தமிழிலும் யாதேனும் விருத்தி உண்டோஎன்பதையும்நோக்குவோம். முற்காலத்தில் நமது இயற்றமிழ் இலக்கியம் முழுவதும் செய்யுள் என்பதையாவரும் ஆமோதிப்பார். செய்யுள்என்பது சாதாரணமாய்ப்பாடப்பட்டதேயன்றி வசனத்தைப் போல் படிக்கப்பட்டதன்று. இதனாற்றான் இதற்குப் பாட்டு என்றும்ஒருபெயர். ஆதலினால் இயற்றமிழை விட்டு அக்காலத்தில் இசைத்தமிழ் வேறு பிரிந்திருக்க ஒண்ணாதென்பது திண்ணம். "செய்யுள்" என்னும் பகுபதத்தைப்பற்பலவிதமாகக் கற்றோர்பகுதி விகுதி பிரித்துப் பொருள் கூறுவார். ஆயினும் யான் கூறும் பொருளும் பொருந்தாதா என்று அறிஞர் ஆராய்க. செய்யுள் என்பதுசெய்வதை உள்ளே அடக்கியுள்ள வோர்தொடர்மொழிஎன்றுபொருள் சொல்லலாம். (The discourse which contains within itself the action) எனவே நடித்துக் காட்டுவதற்கு இடந்தருவதுமாம். ஆகையால் முற்காலத்தில் செய்யுள் மும்முகங்கள் உடையதாய் இயல், இசை, நாடகமென மூன்றிலும் விளங்கியதாம். இவ்வாறு திகழ்ந்தன் நமது சயகுரவர் நால்வரின் திருமுறைகளுமாம். கம்பரும் தனது இராமாயணத்தில் இத்தகைய முத்தமிழ்க் கவித்திறத்தைப் பல பாடல்களில் காட்டுகின்றார். கம்பருடைய காலத்துக்குப் பின்னரே ஆரியநாகரிகத்தால் தமிழ் மூவகையாய்ப் பிரிய இயற்றமிழின் ஏற்றமானது மிகவும் குறைந்தது. ஏனெனில் மூன்று வகையில் பரிட்சிக்கவேண்டிய ஒரு செய்யுளானது இயற்றமிழ் இலக்கணத்திற்கு மாத்திரம் சரிவரநிற்பின் அது ஒப்புக்கொள்ளப்பட்டது. இசைத்தமிழ்என்பது இயற்றமிழுடன் சம்பந்தப்படாது நிற்கவும் ஆரம்பித்தது. இதனால் தமிழிசை முற்கால ஒழுங்குபோல்யாப்பிலக்கணத்தை அடிப்படையாகக் கொள்ளாது மனம்போனபோக்காய்ப்போயிற்று. ஆரிய இராகங்கள் நுழையத் தமிழ்ப்பண்கள் மறைந்தன. மாத்திரை அளவே இசைக்கு அளவை என்பது கருதப்படாமல் விட்டுவிடவும் கர்ணபரம்பரையில் கேட்டவாறே இது சரி சரியல்ல என்று மொழியலானார். ஆரிய வேதம் எவ்வாறு எழுதப்படாமல்பாடப்பட்டுச் சுருதிகளாயும் (What was heard) ச்மிருதிகளாயும் What was remembered) பின்னோருக்குக்கொடுக்கப்பட்டனவோ அவ்வாறே ஆரிய இராகங்களும், பல அரிய பாகங்களில் நூலில் எடுத்துக் காட்டக்கூடாமையாயும் கர்ண பரம்பரையாய் எடுத்துக்கொடுக்கப்பட்டு வருகின்றன. இக்காலத்தில் ஒவ்வொரு இராகத்தையும் ஆலாபனைசெய்யக் கேட்டிருக்கிறோம்; ஒருவர் ஆலாபனைசெய்தமாதிரி மற்றொருவர் செய்வதில்லை. எது சரி யல்ல என்று காட்டக்கூடிய அளவைகளும் இல்லை. இவைமாத்திரமல்ல. ஆரிய இராகங்களன்றி இந்துஸ்தானிமுதலியபாஷைகளிலுள்ள பலவகை இசைகள் நமதுஇசைத்தமிழில் நுழைந்து துள்ளுகின்றன. சிற்சில சமயங்களில் கீர்த்தனங்கள் ஜாவளிகள் பாடுவதை நாம் எடுத்து நோக்குவோமானால் எழுவாய்க்குத் தக்க பயனிலைகள் இல்லாமை பெரும்பாலும் காணலாம். இவையும் தமிழென்றும் இசைத்தமிழில் ஏற்றம்பெற்றனவென்றும் பெரும் புலவரும் கொண்டாடுவதுமுண்டு. ஆனாலவை ஆசாரத்திருத்த போராட்டம் (Social reform struggle) இராஜாங்கத்தில் சுதந்தரப் போராட்டம்(The Struggle For Swaraj) முதலிய விஷயங்களுக்கே பயன்படுத்தப்படுவதால் பலகாலம் உயிர்பெற்று இராதென்பதும் இந்திரகோப (Butter-fly)வாழ்க்கைபோல் ஒருநாளில் ஒழிவன வென்றும் நம்மனத்தைத் திருப்தி செய்யலாம். அதற்கு அத்தாக்ஷியாய்

இத்தகைய இசைகள், பிரதிதினம் உடைகளை மாற்றிக்கொண்டுவருவது (Change of fashions in music)காணலாம். இவற்றைநோக்கும்போதுஇவை எக்காலத்திலும் காதுக்கு இன்பந்தரத்தக்கன வல்லவென்று விளங்கும். இங்ஙனம் நமது தமிழ்இசை படாது பாடுபடும் இச்சமயத்தில் தமிழ் மறைகளும் இவற்றின் பண்களும் சிறிது சிறிது மனிதர் தலையில் நுழைந்துசற்றுவலிதாய் நிலைபெற்றிருப்பதைக்காண்கின்றோம். நவீன இசைகள் இடையிலும் "பித்தா பிறைசூடி," "பொன்னார் மேனியனே" முதலிய தேவார இசைகளும் பாடப்படுவது கார்காலச் சந்திர ஒளிபோல் களிக்கப்படுகின்றது.

ஆயினும் மனம் போனவாறு தேவாரத்தில் பண் அமைத்துப் பாடாது நமதுசமயகுரவர் அவ்வப்பதிகங்களைப் பாடும்போது எந்த நிலையிலிருந்து பாடியிருப்பார்,எவ்வளவுஉருக்கமாய்ப்பாடியிருப்பார்,எவ்வகைக் குரலுடனே பாடியிருப்பார், அவர் இசை இவ்வளவு மாத்திரைக்குமேல் செல்லக்கூடுமா என்பதை ஆராய்ந்து கூடியவரையில் அத்தகைய பக்தியிலிருந்து நம்மவர் பாடமுயலுவாராயின் தமிழ்ப்பண்களின் உண்மை வெளிவரும். "செவ்வழிப் பண்" வண்டுகள் பாடுவதுபோல் இருக்குமென்று சம்பந்தர் முதலாயினோர் கூறுகின்றனர். ஆதலால் அத்தகைய பண் அமைந்த தேவாரத்தை முப்பது அல்லது நாற்பது மாத்திரைக்குமேலும், இசைஒலிக்கும் பொருத்தலாமோ என்றுஆராய்க. நமது தமிழ்மொழியில் இயலிலுள்ள ஆராய்ச்சிஊக்கம் இசைத்தமிழிலும் செல்லுமாயின் நமது பண்டைத்தமிழ்ப் பண்களுக்கும், யாப்பிலக்கணத்துக்கும் உள்ள சம்பந்தம் நன்குவெளிவரும். சென்ற நூற்றாண்டிலும், இந்நூற்றாண்டு முதலிலும், தமிழ் ஆராய்ச்சியில் உழைத்த காலஞ்சென்ற திருவாளர், திருப்பனங்காடு வீரபத்திரமுதலியாரினது விருத்தப் பாவியல் பிரசித்தமாக வழங்கி வந்திருக்கு மாயின் இக்காலத்தில் இசைத்தமிழ்த் துறையில் மிகப்பல ஆராய்ச்சிகள் முடிவுக்கு வந்து பண்டைத் தமிழ்இசை உயிர்பெற்று எழுந்திருக்கலாம். இத்துறையிலும் இக்காலத்தில் சிறிதுஆராய்ச்சிகள் நடந்துவருவதால் அதுவும் இறைவனருளால் முடிவு பெறுமாயின் தமிழின் நல்வினை ஓங்குமென்பது திண்ணம்.

இனி, தற்கால நாடகத்தைக் காண்போம். மூற்காலத்தில் எந்தக்கருத்துடன் நாடகங்கள் ஏற்பட்டனவோ அக்கருத்துக்கள் முற்றும் சிதைந்தன. இராம நாடகம், அரிச்சந்திர நாடகம், பாரதக் கதைகளைச் சேர்ந்த நாடகங்கள் இன்னும் பக்தி சிலம் நற்கொள்கை முதலியன போதிப்பதற்கு என்று எடுத்த நாடகங்க ளிப்போது மேடைகளில் காணப்படவில்லை. மேல்நாட்டு நாடகங்களைப் பதுமை வடிவங்களாய் நிழற்கூத்துக்களிற்காணலாகின்றோம். அங்கங்களின் இடையே மனது ஆழ்ந்த எண்ணங்களில் நுழைய விடாமல்வேடிக்கைக்காட்சிகளைக் (Micky mouse) காண்கின்றோம்.உயிருள்ள மனிதர்கள்வந்துநடிக்கும் மேடைகளிலோ, பார்ஸி,ஹிந்துஸ்தானி முதலியபாஷைகளில் வேடிக்கைக் காட்சி, அகசியம் (Mimicry) இவையே பெரும்பாலும் விளங்கும். எனவே அரங்குகள் ஒருவகைக் கச்சவடமாய் வியாபாரத்துக்குப் பயன்படுவதேயன்றிப் போதனைக்கு உரியஇடமாகத் திகழவில்லை. இத்தகைய இடர்களின் இடையிலும், பக்தி, ஒழுக்கம், நற்குணம் இவற்றை வளர்க்கச்செய்யும் நாடகங்களும் சிறிது எழுதப்பட்டுக் கல்லூரி அரங்குகளிலும் ஏனைய இடங்களிலும் நடிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு தமிழ்மாது கொலைபுரியப்பட்டு முக்கூறாய் வெட்டுண்டு கிடக்கும் தருணத்திலும் அவளை ஒருங்குசேர்த்து முன்போல் உயிருடன் எழுப்பி உலவச்செய்யச் சஞ்சீவி மருந்துகள் சேகரித்து அவைகளைப் பிரயோகிக்கப் பிரயத்தினப்படுத்துவதும்இக்காலத்துவமென்னலாம். அது எத்தன்மை எய்திமுடியுமோ யான் அறியேன். இறைவனருளால் நன்மையே உண்டாகுக. ஆயினும் இந்தக் காலப்போக்கானது,தாயுமானார் எடுத்துக்காட்டியது போல் பொய்திகழும் உலகநடை என்சொல்கேன்! அப் பொழுதுபோக்கே நமது இலக்கியத்திலும் காணப்படுகின்றதாம். அதைச் சீர்திருத்துவதுஅறிஞர் கடனாகும்.

இதுகாறும் பன்முகங்களில் வகுத்துக் காட்டியதைத் தொகுத்துச்சுட்டுவோம். தற்காலக் கொள்கைகள் அல்லது தற்காலத்துவம் என்பதுஇரண்டுபகுதிகளில் அடங்கும். அவையாவன: நல்குரவை வெல்லுவது ஒன்று, இறப்பை வெல்லுதல் என்பது மற்றையது. நல்குரவை நீக்குவதற்கே தேசியக்கலை உழைத்து வருகின்றது. சுயஆட்சி இருக்குமாயின் நமக்கு நல்குரவு நேராதென்பது அக்கலைஞர்களின் கட்சியாம். இதே முன்னேக்குஉடையன நமது ஆசாரச்சீர்திருத்தங்களும். மனிதனுக்கு மனிதன் பேதமாகுவதற்கும் சிலபகுதி ஜனங்கள் மேலெழுவதின்றி விருத்தியற்று க்ஷீணம் அடையாதிருப்பதற்கும் காரணமான குலபேதங்களை ஒழிக்கவேண்டுமென்று முயல்வதும் இதுபற்றியேயாம்.நம்மவர்கள் நமது தேசத்தில் ஒருவரோ டொருவர் பேதமின்றி அன்பால் பிணைக்கப்பட்டு இருப்பாராயின் நல்குரவின்கொடுமை பெரும்பாலும் ஒழியுமன்றோ? இக்கருத்தே பெண்மக்கள் கல்விக்கும் அவர்தம் முன்னேற்றத்திற்கும் செய்யும் உழைப்பின் காரணமாம்.

இவ்வாறு சமுதாயச் செல்வாக்கை நோக்கிச்செய்யும் உழைப்புக்கள் நல்குரவின் கொடுமையை நீக்கி வருகின்றது. சென்ற தாதுவருஷத்திலிருந்த பஞ்சம் இந்தத் தாதுவருஷத்தில் வர இடமில்லை. இரண்டாவது பகுதியில் மரணம் என்பதை ஒழிக்கச்செய்யும் விஞ்ஞானசாஸ்த்திர முயற்சிகள் சரிவர இன்னமும் கைகூடவில்லை.ஆயினும் பலதுறைகளில் பற்பல அறிஞர் ஆராய்ச்சி செய்துவருகின்றனர். இவ்விரண்டும் கைகூடுமாயின்மனிதன்பெறவேண்டிய ஜனனபலனை அத்துணையும் பெற்றான் என்பது தற்காலக் கொள்கையாகும்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.61, மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றுமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலக்ஸ்
ஜ்வரேக் சேர்ம் எவ்வித ஜ்வரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

ஜப்பானியர் முன்னேற்றம்:—ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பானில் இப்பொழுது இந்தியாவில் நிலவிவரும் சமூகச் சண்டைகளும் ஜாதி வித்தியாசங்களும் மலிந்தன. இப்பொழுதோ உலகில் ஒரு முக்கிய அரசாங்கமாக ஜப்பான் திகழ்கின்றது. உலகில் செய்யப்பட்டு வரும் ஒவ்வொரு சாமானையும் அது மிகவும் சொற்பவிலையிலும் நன்ருகவும் செய்து பிறநாட்டார் பணத்தைக் கொள்ளைகொண்டு செல்கின்றது. காரணமென்ன? அவர்களது முயற்சியும் அரசாங்கத்தார் உதவியும் அவர்களிடமிருந்து வரும் ஒற்றுமையுமே! அவர்கள் செய்யாத சாமான்களே கிடையாது. ஜப்பானிய வாலிபர்கள் ஒவ்வொருவரும் சுதந்திர் வாஞ்சையுள்ளவரா யிருக்கின்றனர். ஜப்பானியப் பெண்களும் தொழிற்சாலையில் வேலை செய்து வருகின்றனர். ஜப்பானியர்கள், இந்தியத் தொழிலாளிகள் செய்யும் வேலையைவிட மூன்றுமடங்குஅதிகமாகச்செய்கின்றனர்.

ஜப்பானியர்களுக்கு இரயில்வே கட்டணங்களும் கப்பல் தீர்வைகளும் மிகவும் அநுகூலமாயிருக்கின்றன. மின்சார சக்தி மிகவும் மலிவாயிருப்பதோடுகூட, கிராமாந்திரங்களிலும்மின்சாரவசதிஅபரிதமாயிருக்கின்றது. ஜப்பானிய முதலாளிகள் அதிக லாபத்தை விரும்பாதிருக்கின்றனர். ஜப்பானியர்கள் விளையாட்டுச் சாமான்கள் முதற்கொண்டு மோட்டார்க்கார்கள்வரை எல்லாம்விலை மலிவாகவும்நிரம்ப அழகாகவும் செய்யவல்ல பெருந்திறமை யுடையவர்களாயிருக்கிருர்கள். ஜப்பான் தேசம் விவசாயத்திலும் அதிக முன்னேற்றமடைந்துள்ளது. இன்னும், கல்வித்துறையிலும்அங்குநூற்றுக்குத் தொண்ணூற்றைன்பது பேர் படித்தவர்களா யிருக்கின்ருர்கள். வாலிபர்களுக்கு இளமையிலேயே ராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நெசவுத்தொழிலில்அவர்களுக்கு இணை எவருமில்லையெனவே கூறவேண்டும். ஜப்பான் அடிக்கடி புயற் சேதத்தாலும் பூகம்பத்தாலும்பீடிக்கப்பட்டாலும், ஜப்பானியச் செல்வர்கள் ஒற்றுமையாகப் பணஉதவி செய்து கஷ்டத்தை நிவர்த்திசெய்வது மிகவும் போற்றத்தக்கது. —"லோகோபகாரி"

* * *

ருஷியாவில் தந்திரத்தால் மழை:—ருஷியாவிலுள்ள டார்க் மெனிஸ்டான் என்ற கூட்டத்தார் தங்களது பத்தாம் வருடக் கொண்டாட்டத்தினத்தன்று தந்திரத்தால் மழை பெய்விக்கப் போகின்ருர்களாம். ஒரு கடும்பகல் உள்ள தினத்தில் ஆகாய விமானத்தில் இக்கூட்டத்தார் ஏறிக்கொண்டு 4200 அடி ஆகாயத்தின் மேலே சென்று சில ரசாயனப் பொருள்களைத் தெளிப்பார்களாம். உடனே பெரு மேகங்கள் தோன்றி மழை பொழியுமாம். இவர்கள் இத்தந்திர மழையைப் பெய்யச் செய்வது இனி மழை பெய்ய வேண்டுமென்று எந்தக் கடவுளையும் பிரார்த்திக்க வேண்டாம் என்று காட்டுவதற்கேயாம்.

* * *

பாம்புக் கடிக்குப் பிரார்த்தனை:—மத்திய திருவாங்கூரைச் சேர்ந்த ஈரேவிப் பேரூர் என்ற ஒரு இடத்தில் ஒரு ஆதிதிராவிட கிறிஸ்துவரைப் பாம்பு கடித்துவிட்டது. அவருடைய உறவினர்கள் அவருக்கு வைத்திய சிகிச்சை செய்ய முயன்ருர்கள். ஆனல் அந்தக் கிறிஸ்துவ வாலிபர் இணங்கவில்லை. பாம்பு கடித்த தினம் இரவு முழுவதும் பிரார்த்தனை செய்துகொண்டே யிருந்தார். காலையில் ஊராரும், உறவினர்களும் வியக்க விஷம் இறங்கிக் குணமடைந்துவிட்டார்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஆ ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னுல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)